வாரமலர் * Registered as News paper in Ceylon விலை சதம் 35

ஈழநாடு
THE EELANADU

மலர் 16 சித்திரை 8 ரபி:அவ் 27 ஞாயிற்றுக்கிழமை (21—4—74) இதழ் 6

JAFFNA COLLEGE -7 MAY 1974



ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டது

வழமைபோல் ரயில், பஸ், தபால் சேவை

சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் 22-ந் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை நாடு முழுவதும் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுவிட்டது. ரயில், பஸ், தபால் சேவை யாவும் வழமைபோல் சீரான நிலைமைக்குவந்துள்ளன. நாடுமுழுவதும் அமைதியாக இருக்கின்றது.

பத்திரிகைச் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

அயூப்கான் காலமானார்

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் இன்று மாரடைப்பால் காலமானார்.

பீல்ட்மார்ஷல் அயூப்கான் பத்தாண்டுகளுக்கு மேலாக பாகிஸ்தானின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். அமைதியான இராணுவப் புரட்சிமூலம் ஆட்சிக்குவந்த இவர் தாஷ்கண்ட் ஒப்பந்தம் கைச்சாத்தாகவும், கிழக்கு வங்கம் பிரியாமலும் காப்பாற்றிவந்தார். மரணமாகும்போது வயது 68.

நமது நோக்கு

சாதியை ஒழிப்பதற்கான முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று தமிழக சட்டசபையில் ஒரு பிரேரணையை முதல் அமைச்சர் கருணாநிதி கொண்டு வந்திருக்கிறார். அது நிறைவேறியிருக்கும்.

கூடிய சீக்கிரத்தில் மத்திய அரசாங்கமும் இதை ஒப்புக்கொண்டு அரசியல் சட்டத்தை அதற்கமைய திருத்தக்கூடும்.

இலங்கையிலும் சாதியின் பெயரால் நடக்கும் கொடுமைகள் முன்னைவிடக் குறைந்திருப்பினும், அந்த அரக்கன் இன்னும் ஆங்காங்கே தலைதூக்கியே வருவது கண்கூடு.

ஆனால் சட்டங்கள் செய்வதால் மட்டும் இந்த அரக்கனை ஒழிக்க முடியுமா? மிகவும் சந்தேகம். நம்மில் ஒவ்வொருவரும் எந்தச் சாதியினராக இருப்பினும் நாம்தான் உயர்ந்தவர் என்ற இறுமாப்பும் ஆணவமும் நமக்குள் இருக்கவில்லை. தன்னைவிடச் சாதி குறைந்தவர்களை நாம் அன்புடன் மதிக்கிறோமா?

சாதி, சமயம், பணம், பதவி, நாடு, மற்றும் மொழி, இனம் முதலிய வலிந்த வேற்றுமைகள் நமது இறுமாப்புக்குக் காரணங்களாகவுள்ளன. அந்த வேற்றுமைகளை எல்லாம் சட்டமூலம் நீக்கமுடியாது. ஒரு சாதி இனத்தினருக்குள்ளாகவே உள்ளதா? எவ்வளவு விதவிதமான கொடுமைகள்.

அன்புக்கு எதிரான உள்ள வஞ்சம்தான் இவ்வித கொடுமைகளுக்கெல்லாம் காரணமாகும். உள்ளத்திலே உண்மையில் அன்பு சுரக்கும் ஒருவரின் வேற்றுமைகளுக்கும் கொடுமைகளுக்கும் அங்கு இடமிராது. ஆகவே அன்பையே எல்லாச் சமயங்களும், பெரியோர்களும் வற்புறுத்தி வந்திருக்கின்றார்கள். அன்புடையார் எல்லாம் உடையார்.

அரைநிர்வாணப் பக்கிரியான காந்தி அடிகள் எல்லோரும் போற்றக்கூடிய உயர்ந்த நிலையை அடைந்தாரென்றால் அதற்குக் காரணம் அவருடைய அன்புதான். அவர் தமது என்பையும் கூடமக்களுக்காக அர்ப்பணித்தார். ஆகவே நமது உயர்வும் தாழ்வும் நம் கையிலேயே உள்ளதென்பதையே அவரது வாழ்க்கை நமக்குக் காட்டுவதாக உள்ளது. நம்மிடம் எவ்வளவுக்கெவ்வளவு அன்பு உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு உயர்வோம். அன்பு குறையக்குறைய நாமும் நம்மைத் தாழ்த்திக் கொள்வோராவோம்.

ஜனநாயகத்தை காப்பாற்ற இறுதிவரை போராடுவோம்!

நாட்டுமக்களுக்கு பிரதமர் உரை

கொழும்பு, சனி

'அரசாங்கத்துக்கு எதிரான பிற்போக்கு சக்திகள் மேற்கொண்டு சதிநடவடிக்கைகளை பொறுமையுடன் அவதானித்து வந்தோம். இனியும் பொறுத்திருந்தால் மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து நாம் தவறியவர்கள் ஆகிவிடுவோம். இனியும் பொறுத்திருக்க முடியாது. காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளுக்குப் பணியமாட்டோம். ஜனநாயகத்தை காப்பாற்ற இறுதிவரை போராடுவோம்'

இவ்வாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் இன்று ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்களிடையே சமாதானத்தைக் குலைத்து உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்த யு. என். பி. யும், சகாக்களும் எடுத்துவந்த நடவடிக்கைகளை அரசு கவனித்து வந்தது. [illegible] கஷ்டமான நிலைமையில் [illegible] சாலம் மக்கள் உரிமைகளை பாதுகாத்தே வந்துள்ளது.

1970-ம் ஆண்டு அதிகாரத்தின் [illegible] இருபத்திநான்கு மணி நேரமும் நாடு குண்டையும், கொலையையும், இரத்தக்களரியையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஜனநாயகத்தை நிர்மூலமாக்க எடுத்த நடவடிக்கைகளிலிருந்து நாட்டைக் காப்பாற்ற ஊரடங்குச் சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் கொண்டுவந்தோம். சம்பந்தப்பட்டவர்களை மனிதாபிமானத்துடன் புனர்வாழ்வு அளித்து பெரும்பாலானவர்களை மன்னித்து விடுதலையும் செய்தோம். சட்டப்படி விசாரணை செய்யப்படவேண்டியவர்களே இன்னும் மிஞ்சியுள்ளனர். 1971ம் ஆண்டு கிளர்ச்சியினால் ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்திலிருந்து நாடு மீள்வதற்குள் இன்னும் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. முன்னைய அரசாங்கங்கள் கடன்முடித்தனவாகப் பெற்ற கடன்களைக் கூட ஒரு விதமாகச் சமாளித்தோம். எண்ணெய் நெருக்கடி, உலகப் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே மூலவளங்கள்மூலம் மக்களின் சக்தியை ஒன்றுபடுத்தி நாட்டை வளம்படுத்த முயன்றுகொண்டிருக்கும் இச்சமயத்தில் விரக்தி அடைந்த சில அரசியல்வாதிகளும் ஆதனம் படைத்த சிலரும் அரசாங்கத்துக்கு எதிராக உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தி அரசைக் கவிழ்க்கும் சதிகாரவேலையில் ஈடுபட்டுள்ளனர்.

[illegible] மர் என்ற முறையில் நான் அறிவேன். அரசின் சக்திக்கு அப்பாற்பட்ட இந்த நெருக்கடி நமது நாட்டுக்கு மட்டும் சொந்தமானதல்ல. வேறுபல நாடுகளும் மோசமான நிலையிலுள்ளன. நமது சொந்த முயற்சியினாலேயே நம்மை நாம் காப்பாற்றவேண்டிய நிலையில் இருக்கும் இக்கட்டத்தில் சுயநலமிகளும், சூழ்ச்சிக்காரர்களும் செய்யும் நாசவேலை நடவடிக்கைகளை முற்றாக வெறுக்கிறேன்.

நிலச்சீர்திருத்தம், சம்பளத்துறை சீர்திருத்தம் மற்றும் பலசீர்திருத்தங்களினால் தமது ஆதரவாளர்கள் பாதிக்கப்பட்டதன் பின்னணியை உணர்ந்தே இந்தக் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர்.

இந்நாட்டின் வரலாற்றிலே கடத்தல்காரர்களும், மோசடிக்காரர்களும், அவர்களது சமூகவிரோத நடவடிக்கைகளுக்காக தண்டிக்கப்பட்டு வருவது எமது அரசாங்க காலத்தில்தான் முதல் தடவை.

சாதாரண மக்களை மேல்நிலைக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம். சிலர் இதனால் பாதிக்கப்படுவது உண்மைதான். அவர்களே இந்த குழப்ப நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

அரசாங்க, கூட்டுத்தாபன, பொலிஸ், ஆயுதப்படையைச் சேர்ந்தவர்கள் உத்தியோகங்கள் பறிபோய்விடுமென்று பலத்த பிரசாரங்களும் பயமுறுத்தல்களும் விடப்பட்டிருக்கின்றன. இந்த பயமுறுத்தலின் மூலம், செயலிழந்தவர்களாக்கவே இவர்களது நோக்கம். சொந்த நலனைப் பாதுகாக்க பதவி வெறிபிடித்தவர்களின் தந்திரம் இது.

அந்தந்த அரசுகளுக்கு விசுவாசமாகவும், நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாப்பதென்றும் செய்த சத்தியப் பிரமாணத்தை பாதுகாத்து அரசியல் சாசனத்துக்கு மதிப்பளிக்கவேண்டியது பிரதமர் என்ற முறையில் என் கடமை.

காலஞ்சென்ற எனது கணவர் உயிரைப் பலிகொடுத்தார். இதனைத் தொடர்ந்து பல இன்னல்களை நாம் சந்தித்தோம். 1962ம் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும், 1964ல் பாராளுமன்றத்தைத் தோற்கடிக்கவும் முயன்ற அதே சக்திகள்தான் இன்று கைவரிசையைக் காட்ட முயல்கின்றன. இந்த அரசாங்கம் பதவியேற்ற காலத்திலிருந்து தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டுவருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. தாழ்ந்தவர், [illegible] பெற்றவர்கள் நானாபக்கத்திலும் சகலதொழிலாளருக்கும் உதவிகளும், பாதுகாப்பும் அளித்துள்ளது. இப்படியான அரசை கவிழ்க்கவேண்டுமென முயலும் சதிகாரர்கள், நாசசக்திகளுக்கு எதிராக அணிதிரளுமாறு [illegible].

கிராம அபிவிருத்திக்காக இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளைக் கிராமவாசிகள் யாவரும் அறிவர். அரசின் உணவுத்திட்டத்தில் இடம்பெற்று ஏற்று அரசுக்கு உதவிய கிராமவாசிகளுக்கு அரசு நன்றியுடையதாகவிருக்கிறது. [illegible] கிராமவாசிகள் எதிர்காலத்தில் பீடத்தில் அமர்த்த [illegible] வார்களா? என நான் கேட்கிறேன்.

இளைஞர்கள் எமது சேவையை மறந்துவிட முடியாது. இந்த அரசு பொறுப்பேற்கும்போது 14000க்குமேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றித் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நான் முன்னின்று முயற்சியெடுத்து வாய்ப்பான வேலைவாய்ப்பு அளித்துள்ளேன்

[8ம் பக்கம் பார்க்க]

மரக்கறி கூட்டுக்கறி

தேவையானவை:

உருளைக்கிழங்கு	1/2 றாத்.
கரட்	1/4 "
போஞ்சி	1/4 "
வற்றாளை கிழங்கு	1/2 "
தக்காளி	1/2 "
வெங்காயம்	1/4 "
வினிகர்	2 மேசைக் கரண்டி
நல்லெண்ணெய்	3 மேசைக்கரண்டி
மிளகாய்த்தூள்	தேவைக்கேற்ப
கடுகு	1 தேக்கரண்டி
உள்ளி	1 பூடு
இஞ்சி	1 சிறுதுண்டு
உப்பு	தேவைக்கேற்ப
கறிவேப்பிலை	தேவைக்கேற்ப
சீனி	1 தேக்கரண்டி

செய்முறை:

உருளைக் கிழங்கு, வற்றாளைக்கிழங்கு, கரட் ஆகியவற்றைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி எண்ணெயில் அரைப் பதமாகப் பொரித்தெடுக்கவும். இவற்றைத் தனியாகப் பொரிக்கவேண்டும். வெங்காயத்தையும் நறுக்கி பொன்னிறமாகப் பொரிக்கவும். போஞ்சியை நறுக்கி அவித்துக்கொள்ளவும். தக்காளிப்பழத்தையும் நறுக்கிவைத்துக் கொள்ளவும்.

கடுகு, இஞ்சி, உள்ளி ஆகியவற்றை அம்மியில் நன்றாக அரைத்து வைத்து தேவைப்படி மரக்கறியுடன் கலந்து கொள்ளவும். மிளகாய்த்தூள் கறிவேப்பிலையையும் போட்டு பத்து நிமிடங்கள் வரை அடுப்பில் வைத்து உப்பும் போட்டு வேகவிட்டு வினிகர், சீனியையும் சேர்த்து நன்கு கலந்து இறக்கவும். இதற்கு தேங்காய் தேவையில்லை.

—'[illegible]'

மனையியல் வகுப்பு

கல்வியன்காடு, சனி

[illegible] ஏனைய உப உணவுப் பொருட்களிலிருந்து உணவுப் பதார்த்தங்களைத் தயாரிப்பது சம்பந்தமான மனையியல் வகுப்பொன்று கோண்டாவில் [illegible] நடைபெற்றது.

இவ்வகுப்பில் கலந்து கொண்ட [illegible] பெண்களுக்கும் மேற்பார்வையாளர்களாக திருமதி சி. [illegible] திருமதி எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் கடமை செய்யப் பட்டிருந்தனர்.

இம் மனையியல் பயிற்சி வகுப்பை கோண்டாவில் கிராம சபை நிர்வாகத்தர் திரு. சு. பரஞ்சோதி ஆரம்பித்து வைத்தார். திரு. ஆர். கே. பி. ஐயர் தலைமையில் வகுப்பு நடைபெற்றது.

அரசாங்க செலவில்

அடக்கம் செய்யப்பட்டது

வல்வெட்டித்துறை, சனி

வயோதிபரின் சடலம் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த கே. குழந்தைவேலு (85 வயது) என்பவர் கற்கோவளத்தில் அநாதரவான நிலையில் இறந்து கிடந்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரண விசாரணை நடாத்தினார்.

பருத்தித்துறை பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். ஆனந்தவடிவேல் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

கற்கோவளம் வாசியான 80 வயது தாத்தா சின்னையா நாகலிங்கம் என்பவர் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் "காலஞ் சென்றவரை அநேக காலமாக தெரியும். திருகோணமலை வாசியாக இருந்தாலும் கற்கோவளத்தாருடன் தொடர்பு உள்ளவர். மரநிழலிலும், மரத்தின் கீழும் உறங்குவார். நிரந்தர இடம் என்பது இல்லாதவர். இவ்விடம் கடந்த இரண்டு மாதமாக அவருடைய சீவியத்தை கண்டிருக்கிறேன். அன்று நான் வீட்டில் இருக்கும்போது மரத்தின் கீழ் சனங்கள் கூடிநிற்பதைக் கண்டு நான் அவ்விடம் வந்து பார்த்தேன். அவர் இறந்திருக்கக் கண்டேன். கற்கோவளம் கிராமசேவகரிடம் தகவல் கொடுத்தேன்" என்றார்.

முன்னைநாள் கிராமவிதானை திரு. எஸ். வி. பொன்னுத்துரை, கற்கோவளம் கிராம சேவகர் சோமஸ்கந்தன் ஆகியோர் மரணவிசாரணை அதிகாரி முன்னிலையிலும் சாட்சியமளித்தனர். இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

10 கூட்டுத் தாபனங்கள்

நட்டத்தில் இயங்குகின்றன

கொழும்பு, சனி

கடந்த ஆண்டு 25 அரசாங்க நிறுவனங்கள் அதிக லாபத்துடன் இயங்கியுள்ளதாகவும் பத்துக் கூட்டுத்தாபனங்கள் நட்டத்துடனும் 8 கூட்டுத்தாபனங்கள் ஓரளவு நயத்துடனும் இயங்கியுள்ளதாகவும் அரசாங்க புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், தோல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், மட்பாண்டக் கூட்டுத்தாபனம், கனிப் பொருள் கூட்டுத்தாபனம், புகையிலைக் கூட்டுத்தாபனம், பிடவைக் கூட்டுத்தாபனம், இரத்தினக்கல் கூட்டுத்தாபனம், தோட்டத் தொழில் கூட்டுத்தாபனம், உழவு இயந்திர கூட்டுத்தாபனம், மரத்தன் இரசாயன கூட்டுத்தாபனம் ஆகியவை அதிக நட்டம் அடைந்துள்ளதாக புள்ளிவிபரம் கூறுகிறது. அத்துடன் மக்கள் வங்கி, சதொச தாபனம் ஆகியவையும் லாபத்துடன் இயங்கியுள்ளன. (ஈ)

[illegible]கமாக

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்து என்று பல இடங்களுக்கு எல்லாம் சென்றுகொண்டிருக்கிறார் இந்தக் கார்த்திகேசு. 1968-ம் ஆண்டு வெளிநாட்டு கப்பலில் சேர்ந்து கொண்டார்.

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் திரும்பி வந்தவருக்கு திருமணம் நடந்தது.

பத்தொன்பது நாட்கள் ஆகவில்லை—

மஞ்சள் நிறமே மனைவியுடன் படுத்துறங்கவேண்டிய நேரத்தில் வெளிநாட்டுக்கப்பல் இவரை அவசர அவசரமாக அழைத்தது.

சென்றுவிட்டார்.

இரண்டு வருடத்தின் பின் திரும்பி வந்தார். —அன்பு மனைவியையும், பெற்றோரை ஆசைதீர கண்டுபேசி பல நாட்கள் கழித்து மீண்டும் கப்பலுக்குப் போய்விட்டார்.

—இப்போது அவர் வகிக்கும் பதவி பொறுப்புள்ள பதவி. ஒரு பகுதிக்குப் பொறுப்பானவர்.

அதிகாலை காப்டனைச் சந்திப்பார். அவர் சில வேலைகளைச் சொல்லுவார் அவருக்குக் கீழ் வேலைசெய்பவர்களைக்கொண்டு அந்த வேலைகளை நிறைவேற்ற வேண்டும்.

⁂

வெளிநாட்டுக் கப்பல்களில் இவ்வளவு தொகையான வல்வை இளைஞர்கள் பணியாற்றும் நிலையை உருவாக்கிக் கொடுத்துக்கொண்டு பின்னணியில் நிற்கும் இவரைப்பற்றி எழுதாமல் இருக்கமுடியவில்லையே!

தன்மை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்கும் இவர்கள் தன்னலமற்ற சேவையாளர்கள்.

அம்பலம் மாஸ்டர் குறிப்பிடக்கூடியவர்.

கப்பல் இரகசியங்களை இளைஞர்களுக்கு வகுப்புவைத்துச் சொல்லிக்கொடுத்து — வெளிநாட்டுக் கப்பலில் பணியாற்றக்கூடிய தகுதியை ஏற்படுத்தியவர் இவர் [illegible]ம் அமைதியான சேவைசெய்யும் இவருக்கு அடக்கம் சொந்தமானது.

மற்றவர் இளைஞர், வல்வெட்டித்துறை வாசிகள் இந்த இளைஞருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

மணிவாசகர் என்ற பெயரை வைத்துக்கொண்டுள்ள இவர் எத்தனையோ இளைஞர்களை வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மணிவாசகர் பல நாடுகளுக்கும் அடிக்கடி பறந்து சென்றுகொண்டிருப்பார்.

"சிகரெட்" ஒன்றன்பின் ஒன்றாக விடாது ஊதித்தள்ளிக்கொண்டேயிருக்கும் இவர் கொழும்பு வரும்போதெல்லாம் ஐம்பது வாலிபர்கள் இவரைச் சுற்றிக்கொண்டேயிருப்பார்கள். எப்படியாவது ஒருதடவையில் ஐந்து வல்வை வாலிபர்களுக்காவது வெளிநாட்டுக் கப்பலில் இடம்பிடித்துக் கொடுத்துவிடுவார்.

மணிவாசகரை வல்வை வாலிபர்கள் மறக்கவேமாட்டார்கள்!

(அடுத்த இதழில் முடியும்)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?
வருகை தாருங்கள்!
பொ. அம்பலவாணர்
தங்க, வைர, நகை [illegible]
119, கஸ்தூரியார் [illegible]
போன்: 7199.
தந்தி: வைரம்

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

எமிலிஸ்டன் அரைத்த உப்பு மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். உப்பு கழுவி அரைத்தும் கொடுக்கப்படும். [illegible] இறைன்டிமில்ஸ், 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். டெலிபோன்: 611. 41

நாஷனல் பனாசோனிக் (புதிய மொடல்) ஏ. ஸி/பற்றறியில் இயங்கும் 3 பாண்ட் ஒலி பெருக்கியில் அமைக்கப்பட்ட ஒலிக்கட்டுப்பாட்டுடன் கூடிய ரேடியோ ரேப்ரெக்கோடர் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: "யோகஸ்தான்" முருகேசப் பண்டிதர் வீதி, சுன்னாகம் 78

தேவை

22 வயதுடைய ஜி. ஸி. ஈ. சாதாரணம் இன்ஸ்டிடியூட் ஒவ் புக்கீப்பர்ஸ் இறுதிப் பரீட்சை, லண்டன் பிற்மன் கணக்குப் பதிவு உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தி எய்திய தட்டெழுத்து அறிவுள்ள பெண்ணுக்கு தகுதியான வேலை தேவை. விண்ணப்பிக்கவும்: யோகநாதன், 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 58

காணிவிற்க அல்லது வாங்குவதற்கு உண்டா? விவசாயம், வர்த்தக விஸ்தரிப்புக்குக் கடன் தேவையா? தொடர்பு கொள்ளுங்கள்: பிரசித்த [illegible] 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 73

[illegible] பொறுப்பாளர் தேவை. மொத்தச் சம்பளம் 250/X17-50/-X20X600/- பிணைப் பணம் ருபா 5000/- கட்ட வேண்டும், அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் சொந்தக்கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். [illegible] விண்ணப்பங்களுக்கு முதன்மை அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும்: ஒக்டோமன் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 74

இரவுக் காவலாளி தேவை. மொத்தச் சம்பளம் 150/-X7-50X20X300/- ரூபா 500/- பிணைப் பணமாகச் செலுத்தவேண்டும், விண்ணப்பிக்கவும்: ஒக்டோமன் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 75

இனிமேல் தற்காலிக ஊழியர் இல்லை

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் சீமெந்து அடைக்கும் பகுதிக்கு தொழிற்சாலை நிர்வாகம் தற்காலிக ஊழியர்களை திடீரென நியமித்ததை ஆட்சேபித்து தொழிற்சாலை நிரந்தர தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதையடுத்து இனிமேல் இப்படி தற்காலிக ஊழியர்களை நியமிப்பதில்லை என நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் சீமெந்து அடைக்கும் பகுதிக்கு தொழிற்சாலை நிர்வாகம் திடீரென தற்காலிக ஊழியர்களை நியமித்து அவர்கள் மூலம் அப்பகுதியை இயக்க முனைந்தது.

இதை எதிர்த்து தொழிற்சாலைத் தொழிற்சங்கங்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தொழிற்சாலை நிரந்தர தொழிலாளர்கள் சீமெந்து அடைக்கும் பகுதியை பெருந்திரளாகக்கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதையடுத்தே தொழிற்சாலை நிர்வாகம் இனிமேல் இப்படியாக தற்காலிக ஊழியர்களை நியமிப்பதில்லையென உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இது குறித்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையைச் சேர்ந்த சீமெந்து பொதித் தொழிலாளர் யூனியன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தேசிய உடைமைகளைப் பாதுகாக்கும் உரிமை எமது யூனியன்களுக்கும் உண்டு என்றும். தேசிய உடைமைகளைப் பாதிக்கும் விதத்தில் தொழில்முறை தகுதியற்ற ஊழியர்களை நியமித்து சீமெந்து அடைக்கும் பகுதி இயந்திர சாதனங்களை இயக்கமுனைந்ததால் உடைமைகளைப் பாதுகாக்கும் விதத்திலேயே உடனடியாக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அதற்கு உடன் பலன் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வகுப்புகள்

மாலைப் பாடசாலை ஆசிரியர் சேவையாளர் மாலைப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஜி. ஸி. ஈ. சாதாரணம் பெற்றவர்களுக்கு நாள ஆரம்பிக்கவிருக்கும் இலவச மாலைப் பாடசாலை ஆசிரிய பயிற்சி வகுப்புக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விலாசம் இல. 12, C/o ஈழநாடு, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 12

BA; GAQ வகுப்புகள் சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நடைபெறும். புதிய விதானியப்படி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் G. C. E. உயர்தர தகுதியின்றி G. A. Q. பரீட்சைக்குத் தோற்றலாம். G. C. E. சாதாரண, உயர்தர கலை/வர்த்தக காலை, மாலை வகுப்புகள்— சோதனை வகுப்புகள் சிறப்புப்பயிற்சி பெற்றவர்களால் நடாத்தப்படும்! விபரங்களுக்கு: பணிப்பாளர்! BRILLIANT INSTITUTE 31/1 சிவன்கோவில் வீதி, யாழ்ப்பாணம். 85

வைத்தியம்

சோகை தேமல், கரப்பன், சொறி குஷ்டம் முதலிய வியாதிகளுக்குச் சிகிச்சையும் அளிக்கப்படும். காலை 8 மணி முதல் 12 மணி வரை. [illegible] வீதி, ([illegible]) யாழ்ப்பாணம். [illegible]

பலன்

கைரேகை, ஜோதிடம் மூலமாகவும் சாதகத்துடன் பலன் கூறப்படும். விபரங்களுக்கு: முருகன் சோதிட நிலையம், சிவலோசவன் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 86

ஐவரும் விடுதலை

மாவிட்டபுரம், சனி

குரும்பசிட்டியை சேர்ந்த இ. போ. ச. பஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாகக் கைதான நபர்கள் ஐவரும் ஆதாரம் காணப்படாததால் அவர்களை மல்லாகம் பதில் நீதிபதி திரு. தங்கரத்தினம் விடுதலை செய்துள்ளார்.

குரும்பசிட்டியில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதிநாள் சம்பவத்தையடுத்து இ. போ. ச. பஸ்ஸொன்று தீவைக்கப்பட்டது குறித்து விசாரணையின் பேரில் காங்கேசன்துறை பொலிசார் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஐவரை சந்தேகத்தில் கைதுசெய்திருந்தனர்.

இவர்களை அடையாளம் காண்பதற்கான அணிவகுப்பு ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. சி. தங்கரத்தினம் முன்னிலையில் நடைபெற்ற சமயம் [illegible] பஸ் சாரதி வி. இராசையா, கண்டக்டர் சண்முகலிங்கம் ஆகியோர் மேற்படி நபர்களை அடையாளம் காட்டத் தவறியதையடுத்து நீதிபதி அந்நபர்களை விடுதலை செய்தார்.

சிறுகதை

நிழலைத் தேடி

இதுவரை வயிற்றுச் சுமையுடன் அலைந்து திரிந்த திலகம் இப்போது வயிற்றுச் சுமையைக் குழந்தை உருவில் கையில் தூக்கிக்கொண்டு அந்தத் தெருவில் நுழைந்தாள். அவள் அந்தத் தெருவில் நுழைந்தவுடனேயே இரண்டொரு வீட்டுக்கதவுகள் சாத்தப்பட்டு விட்டன. சிலர் அவளை ஒரு அதிசயப்பொருளைப் பார்ப்பதுபோல வேடிக்கையாகப் பார்த்தனர். முகத்தைச் சுழித்தபடி அவளைப் பார்த்தும் பார்க்காததுபோல் நடந்துகொண்டிருந்தனர் சிலர். இவர்களை எல்லாம் பார்க்கும்போது திலகத்தால் தலைநிமிர்ந்து நடக்க முடியவில்லை. நடையைத் துரிதப்படுத்திக்கொண்டாள்.

சிலபெண்களின் கேலிப் பேச்சுக்களும் காற்றுடன் கலந்து திலகத்தின் காதுகளிலும் விழாமலில்லை. எதிர்த்துப் பேசும் சக்தியில்லாமல் கேட்டும் கேளாததுபோல் நடந்துகொண்டிருந்தாள்.

திலகம் ஓர் இளம்விதவை. இரண்டு வருடங்களுக்குமுன் திருமணம் நடைபெற்றது. ஒருமாதம்கூட அவள் வாழ்க்கைப் பயணம் நீடிக்கவில்லை. அவள் விதவைப்பட்டம் பெற வேண்டும் என்ற ஆசையில் கணவன் கண்ணை மூடிவிட்டான். அனுபவிக்கவேண்டிய வயதில் வெள்ளைச் சேலை அணிந்துகொள்ளவேண்டிய நிலை. திலகம் பெண். மனித உணர்ச்சிக்கு அடிமைப்பட்டவள் என்றாலும்கூட சமூகம் என்ற ஒன்றிற்குப் பயந்து உணர்ச்சிகளை அடக்கிவாழக் கஷ்டப்பட்டாள். இருபத்திரெண்டு வயதில் இப்படி ஒரு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்றால் நடக்கக் கூடியதா? திலகம் அந்த உணர்ச்சிக்கு அடிமையாகி விட்டாள். பலன், கையில் குழந்தையுடன் இப்போது அலைகிறாள். ஆதரவு கொடுக்க அவளுக்கு ஒரு நாதியுமில்லை.

விதவை என்றால் அவளுக்கு ஆசைகள் எழக்கூடாது! ஆடவரை மனதிலும் நினைக்கக் கூடாது; வெள்ளைப்புடவையைத் தவிர வேறு ஒன்றும் அணியக்கூடாது. இவையெல்லாம் சமூகம் அவளுக்கு விதித்த கட்டுப்பாடுகள். ஆனால் திலகம் இந்தச் சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்தெறிந்துவிட்டாள்.

தேவையில்லாத சம்பிரதாயங்களையும் மரபுகளையும் கடைப்பிடித்துவரும் நம்மவர்களுக்குத் திலகம் சவால் விட்டாள். சமூகம் ஒன்றுசேர திலகம் தனித்து விடப்பட்டாள். திலகத்திற்குக் குழந்தையைப் பரிசளித்த அவனும் அந்தச் சமூகத்தோடு சேர்ந்து திலகத்தை ஒதுக்கிவிட்டான்.

அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை வீறிட்டு அழுதது. பசியில் அழுகின்ற குழந்தைக்கு அமர்ந்து பாலூட்டுவதற்கு திலகத்திற்கு அங்கு ஓர் இடம் கிடைக்கவில்லை.

வெறுப்புடன் ஏறிட்டு நோக்குகின்ற முகங்களைத்தான் திலகத்தால் அங்கு காணமுடிந்தது. வேகமாக நடந்தாள். குழந்தை அழுதுகொண்டேயிருந்தது.

பிள்ளையார் கோவிலை நோக்கி நடைபோட்டாள். அங்காவது அமர்ந்து பிள்ளைக்குப் பாலூட்டலாம் என்ற நினைப்பில், உலகில் நடைபெறும் நன்மை தீமைகளை எல்லாம் பொருட்படுத்தாது சிலையாக அமர்ந்துவிட்ட பிள்ளையார், திலகத்தைப் போன்றவர்களுக்கும் இடமளிப்பார். கையில் சாராயப் போத்தலும், சீட்டுக்கட்டுமாக வருகின்றவர்களுக்கும் இடமளிப்பார். காமக்களியாட்டம் புரியவும் இடமளிப்பார். ஆகவே திலகம் தைரியமாக கோவிலைநோக்கி நடைபோட்டாள்.

கோவில்படிகளில் அமர்ந்துகொண்ட திலகம் சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு, குழந்தைக்குப் பாலூட்டத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள். தாயின் அணைப்பில் சுகமடைந்த குழந்தை ஒருகணம் அழுவதை நிறுத்திவிட்டு மறுபடியும் அழத் தொடங்கியது.

திடுக்கிட்டாள் திலகம். தாய்ப்பாலில்லை. அவள் சாப்பிட்டே இரண்டு நாட்களாகிவிட்டன. தாய்ப்பால் எப்படியிருக்கும்.

திலகத்தின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் குழந்தையின் வாயில் விழுந்தது. திலகம் சிலையை ஏறெடுத்துப் பார்க்கின்றாள். அன்று திலகத்தின் கையிலடித்துப் பிள்ளையார் முன்பு சத்தியம் செய்த அவனை அதே இடத்தில் எண்ணிய போது எப்படியிருந்ததோ அதேபோல்தான் இப்போதும் இருந்தது.

ஆனால், திலகத்திற்கு அன்றிருந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் இன்றில்லை வேதனையில் வெந்துகொண்டிருந்தாள்.

எப்படியும் தனக்கு வாழ்வளித்து, கனவுகளை நனவாக்குவான் என்று எதிர்பார்த்த திலகத்திற்குத்தான் எவ்வளவு பெரிய ஏமாற்றம், வேதனை.

குழந்தை அழுதுகொண்டேயிருந்தது. தொடர்ந்தும் இன்னும் சில நிமிடங்கள் அழுதால், அது இறந்துவிடும். பசியால் அழுதழுது தன் பிள்ளை இறக்கப்போகின்றதே என்று நினைக்கும்போது திலகத்திற்கு இதயமே வெடித்துவிடும்போலிருந்தது.

"பெற்றமனம்பித்து பிள்ளைமனம் கல்லு" என்பார்களே. என்பிள்ளை கதறுவதுகண்டு நான் துடிக்கின்றேன். என் நிலைகண்டாவது என் பெற்றோர் மனமிளகமாட்டார்களா? திலகத்திடம் கேள்வி எழுந்தது. அதற்கு விடை கேட்கப் புறப்பட்டாள்.

திலகம் வீட்டுக் கதவைத் தட்டினாள். சிறிது நேரத்திற்குப்பின் கதவு திறக்கப்படுகிறது.

அம்மா...என்று அலறியது திலகத்தின் வாய். மறுகணம் திறந்த வேகத்திலேயே கதவு சாத்தப்படுகிறது.

துவண்டுபோய் கிடந்த பிள்ளையை தோளில் சுமந்தபடி பிள்ளையார் கோவிலுக்குத் திரும்பினாள். திக்கற்றவளுக்கு அந்தப்பிள்ளையார்தான் துணையாக இருப்பவர்.

திலகம் சிந்திக்கிறாள். அவள் செய்தது அப்படி ஒன்றும் தவறாகத் தெரியவில்லை. வாழ வேண்டிய வயதில் ஆசைகளை அடக்கிக்கொண்டு எப்படித்தான் வாழ்வது. அவளைத் தவறுசெய்யத் தூண்டியதே இந்தப்பாழும் சமூகமும் வரட்டுச் சம்பிரதாயங்களும்தான். உண்மையில் திலகம் குற்றமற்றவள்தான். ஆனால் அவளைக் குற்றவாளியாக்கி விரட்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்ற சமூகம்தான் உண்மையிலேயே குற்றவாளி. பெற்று வளர்த்துவிட்டபோதிலும், ஓர் இளம் பெண்ணின் உணர்ச்சிகளை மதிக்காது, அவளை உணர்ச்சியற்றமரக்கட்டையாக மதித்து வளர்த்துக்கொண்டிருந்த திலகத்தின் பெற்றோர்களும் குற்றவாளிகள்தான்

கோவிலில் அமர்ந்து மௌனமாக கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள் திலகம். அவள் தானே வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்தாள். தனக்கும் பிள்ளைக்கும், ஏதாவது வழி தேடவேண்டுமே. இந்த ஊரில் திலகத்தால் வேலைசெய்யமுடியாது. அவளுக்கு வேலைதரவும் இங்கு ஆளில்லை. வேறு எங்காவதுதான் போகவேண்டும். அதற்குத் தேவை பணம். திலகம் தன் காது, கழுத்து களையெல்லாம் தடவிப்பார்த்தாள். எல்லாம் மொட்டையாக இருந்தன. உடுத்தியிருந்த உடையைப் பார்க்கின்றாள். அழுக்கேறிய உடை துவைத்து எவ்வளவு நாட்களோ.

திலகத்தின் மனதில் எழக்கூடாத எண்ணங்கள், ஒரு பயங்கரப் போராட்டம். வாழ வழியில்லாமல் தவித்த அவள் அப்படி நினைத்ததில் தவறு இல்லை. என்றாலும்கூட இப்போது அவளை வெறுத்து விரட்டித் தள்ளிவிட்ட அந்த சமூகத்திற்கு இன்னும் அவள் பயந்துகொண்டிருந்தாள்.

இரவு நீண்டுகொண்டிருந்தது. தெருவிளக்கின் வெளிச்சம் ஆலயத்திலுள்ளும் மங்கலான வெளிச்சத்தைச் செலுத்தியது. சோவென்று மழை கொட்டத்தொடங்கியது. திலகத்தின் நிலை கண்டுதான் இயற்கை சதாம் அழுததா? அல்லது திலகம் செய்யப்போகின்ற பெரிய தவறை நினைத்ததா?

திடீரென்று ஏதோ ஒலி. திடுக்கிட்ட திலகம் தலைநிமிர்ந்து பார்க்கின்றாள்... அவனேதான்...யாரால் இந்த நிலையேற்பட்டதோ அவனே அங்கு நின்றுகொண்டிருந்தான்.

திலகா...என்னைமன்னிச்சிடு. நான்...பெரிய தவறு செய்திட்டேன்...திலகா... இப்பத்தான் உணருகின்றேன். வா... திலகா...எங்காவது போய்விடலாம்...என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு ... அவளை அழைத்தான்.

திலகத்தால் நம்பமுடியவில்லை. எப்படி எப்படியெல்லாம் வாழ முடிவுசெய்த அவளுக்கு நிழல் கிடைத்துவிட்டது. மழை ஓய்ந்துவிட்டது. திலகத்தை அழைத்துக்கொண்டு கையில் குழந்தையுடன் அவன் வீதியில் இறங்கினான். நிழலைத்தேடிக்கொண்டு அவள் போகின்றாளோ?

(யாவும் கற்பனை)

எஸ். கே. எஸ்.

> திலகம் சிந்திக்கிறாள். அவள் செய்தது அப்படி ஒன்றும் தவறாகத் தெரியவில்லை. வாழ வேண்டிய வயதில் ஆசைகளை அடக்கிக்கொண்டு எப்படித்தான் வாழ்வது........

சட்டத்தரணி, இசைக்கலைஞர், வானசாஸ்திர வல்லுனர், கணிதப்பட்டதாரி

அமைதிக்கு ஒரு 'செந்தில்'

சிறப்பும், பதவிப்பட்டம் இவையெல்லாம் கொஞ்சம் படித்துவிட்டாலும்கூட சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுவது இயற்கை. இதற்கு விதிவிலக்காக இந்தக் காலவேகத்தில் நின்றுகொண்டிருப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இந்தக் கஷ்டமான வேலையை விடாப்பிடியாகச் செய்துகொண்டிருக்கும் ஒரு பிரபல சட்டத்தரணியை சமீபத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

நாற்பத்தைந்து வயதுவரை எதையெல்லாம் படித்து மனத்தை நிறைவுபடுத்த முடியுமோ அதையெல்லாம் கற்றுத் தம்மைப் பூரணப்படுத்தமுயற்சி செய்துகொண்டிருக்கிறார். என்பதை சட்டத்தரணி திரு. டபிள்யு. எஸ். செந்தில்நாதனுடன் யாழ் நகரிலுள்ள அவரது இல்லத்தில் பேசிக்கொண்டிருந்தபோது நன்கு அறியக் கூடியதாக இருந்தது.

ஆங்கிலம் கற்ற தமிழர் சிலர் தமிழைப் பேசுவதில்லை. தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஆங்கிலத்தை அறவே வெறுத்து விடுகின்றார்கள். கணிதம் கற்றவர்கள் கலையை ரசிப்பதில்லை. கலையுள்ளம் கொண்டவர்கள் கணிதத்தின் கணக்கைப் பார்ப்பதில்லை; எல்லாமே தெரிந்திருந்தால் மனம் நன்கு விரிவுபடும் என்று சிலர்தான் எண்ணுகிறார்கள். இந்தச் சிந்தனையை திரு. செந்தில் வளர்த்துக் கொண்டிருக்கிறார். இவரது வார்த்தைகளில் பெருமையின் தொனி தெரிவதில்லை. பக்குவநெறி தவழ்கிறது. சாதாரண ஒரு கணிதப் பட்டதாரி ஆசிரியராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்த திரு. செந்தில்நாதன் இத்தனை உயர்ந்த இடத்திற்கு வந்தது எதனால் என்ற கேள்வி என்னுள் எழுந்தது. அவரையே கேட்டேன். அவர் தந்த பதில்:

"அயராத ஊக்கமும் உழைப்பும்தான் (மெதுவான குரலில்தான் இதைச் சொன்னார்)

எனது முன்னேற்றப்பாதையில் பல்தடைகள் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் தளராத முயற்சியினாலேயே சமாளிக்க முடிந்தது.

திரு. செந்தில்நாதனின் அன்னை அவரது நான்காவது மாதத்தில் காலமானார். தந்தை இவரது ஐந்தாவது வயதில் காலமானார். இதனை அவர் கூறும்பொழுது பாசத்தின் ஈரம் கண்களில் தெரிந்தது.

"செந்தில்" என்று அவரது நண்பர்களால் செல்லமாக அழைக்கப்படும் திரு. செந்தில்நாதனின் மனப்போராட்டத்தையும், வாழ்வின் ஆரம்பப் போராட்டத்தையும் என்னுள் நன்கு உணரமுடிந்தது.

தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மிக நெருக்கடியான ஒரு சூழ்நிலையைக் கூறமுடியுமா?

சிறிது சிந்தித்துவிட்டு செந்தில் கூறத் தொடங்கினார்.

"1962ம் ஆண்டு ஹெல்சிங்கியில் (பின்லாந்தின் தலைநகரம்) நடைபெற்ற சர்வதேச இளைஞர் விழாவில் கலந்துகொள்ளும்படி எனக்கு அழைப்புக் கிடைத்தது. அப்பொழுது நான் யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இதே நேரத்தில்தான் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றது. அரசாங்க ஊழியர்கள் ஹெல்சிங்கி விழாவில் கலந்துகொள்ளமுடியாது எனக்கு கிடைத்த நேரத்தில் அரசாங்கம் ஓர் உத்தரவை விதித்தது. தர்மசங்கடமானதொரு நிலை [illegible] பெற்று ஹெல்சிங்கி சென்றேன்.

"அப்பொழுது உனது வயது எத்தனை?"

"33." ஹெல்சிங்கியிலிருந்து திரும்பி இலங்கை வந்ததும் என்ன தொழில் பார்ப்பது என்பதுதான் எனது பெரிய சவாலாக இருந்தது இந்த நேரத்தில் ஏற்பட்ட நெருக்கடியான நிலை எனது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தியது. நெருக்கடியான சூழ்நிலையில்தான் மனிதனுக்கு அமைதியான, நிதானமான சிந்தனை தேவைப்படுகிறது. சிறது இலங்கை திரும்பிய நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்து, வழக்கறிஞரானேன். இப்படிக் கூறிமுடித்தபோது அவரது முகத்தில் மெல்லிய புன்சிரிப்பு படர்ந்தது. வெற்றிக்கும் தோல்விக்கும் அவர் சொந்தமாகத் தேடிவைத்திருக்கும் புன்சிரிப்பா அது?

தாங்கள் வேறெந்த வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறீர்கள்?

ஹெல்சிங்கிக்கும் போகும் பொழுது ரஷ்யாவுக்கூடாகச் சென்றேன். அப்போது மாஸ்கோவில் சில நாட்கள் தங்கியிருந்தேன். பின் யூகோஸ்லவியாவுக்கும் சென்றேன். 1967-ல் இங்கிலாந்து சென்று அங்கு சுமார் இருவருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தேன்.

சோஷலிஸ் நாடுகளில் தங்களைக் கவர்ந்த அனுபவத்தைக் கூறமுடியுமா?

"இந்த நாடுகளில் வீடு, பிள்ளைகளின் கல்வி, தொழில், சினிமா இதுபோன்ற கவலைகள் மூன்றுமே இல்லாமல் மக்கள் நிம்மதியாக வாழ்க்கையை நடத்துகின்றார்கள். சுருக்கமாகவும் மிக ஆழமாகவும் கூறினார் செந்தில்

இங்கிலாந்தில் தாங்கள் ஆசிரியராகக் கடமையாற்றியதாகக் கூறினீர்கள். அங்குள்ள ஆசிரியர்களுக்கும் இங்குள்ள ஆசிரியர்களுக்குமுள்ள வேறுபாடுகள் என்ன?

அங்குள்ள ஆசிரியர்களைப் போலும் பயிற்றப்பட்டவர்

7-ம் பக்கம் பார்க்க.

சட்டத்தரணி டபிள்யூ எஸ். செந்தில்நாதன்

சந்திப்பு: க. கணேசலிங்கம்

கலைமணி கொத்தமங்கலம் சுப்பு



"ஒருவீட்டு மேடையிலே ஒரு பந்தல், ஓலைப்பந்தல் தென்னோலை. குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கிற் கழிகளைச் சாதாரண கயிற்றால் கட்டி மேலே தென்னங்கிடுகுகளை விரித்திருக்கிறது.

ஒரு மூங்கிற்கழியிலே கொஞ்சம் மிச்சக்கயிறு தொங்குகிறது. ஒருசாண் கயிறு இந்தக் கயிறு. ஒருநாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பார்த்தால் துளிகூடக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை சில சமயங்களில் அசையாமல் 'உம்' மென்றிருக்கும். கூப்பிட்டால் கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை. 'குஷால்' வழியிலிருந்தது.

எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் சிநேகம். நாங்கள் அடிக்கடி வார்த்தை சொல்லிக் கொள்வதுண்டு

''கயிற்றினிடத்தில் பேசினால் அது மறுமொழி சொல்லுமா?''

பேசிப்பார் மறுமொழி கிடைக்கிறதா? இல்லையா என்பதை? ஆனால் அது சந்தோஷமாக இருக்கும் சமயம்பார்த்து வார்த்தை சொல்லவேண்டும். இல்லாவிட்டால் முகத்தைத் தூக்கிக்கொண்டு சும்மா இருந்துவிடும். பெண்களைப் போல.

அது எப்படியிருந்தாலும் இந்த வீட்டுக் கயிறு பேசும். அதில் சந்தேகமேயில்லை'' — மகாகவி பாரதியார் எழுதிய வசனகவிதைப்பகுதியில் காற்று என்ற தலைப்பில் எழுதியுள்ள ஒரு பகுதிதான் இது. ஆம், பாரதியாரின் கயிறு பேசுகிறது.

''பார்க்கப்போனால் நான் மரந்தான் என்று ஆரம்பித்து ஒரு குளத்தங்கரை அரசமரத்தைப் பேசவைக்கிறார் வ. வெ. சு. ஐயர். தமிழில் முதல்முதல் வெளிவந்த 'மங்கையர்க்கரசியின் காதல்' தொகுதியிலே உள்ள அந்தக் 'குளத்தங்கரை அரசமரம் தனது ஆயிரம் இலை நாவுகளாலும் ருக்மணியின் சோகவாழ்வைச் சொல்லுகிறது. ஆம் இந்தக் கதையில் அரசமரம் பேசுகிறது.

மகாகவி தாகூர் எழுதிய படித்துறை சொல்லும் கதையின் அருமைப்பாட்டை எண்ணிப் பலர் தமிழ் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

வ. வெ. சு. ஐயரின் அரசமரம்போல, தாகூரின் படித்துறையும் கதை சொல்கிறது இவை மாத்திரமா? கிருஷ்ண சந்தரின் சிலை பேசிற்று என்ற கதையில் லெனினின் சிலை பேசுகிறது.

கலைமணி கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் அற்புதமாக ஒரு சிலை பற்றி சுவையாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போது என் மனத்திரையில் மேற்படி கதைகள் நிழலாடிக் கொண்டிருந்தன.

ஈழகேசரி பொன்னையா அவர்களது ஞாபகார்த்தமாக அவரது உருவச்சிலை நிறுவலாமா? அல்லது அவர் பெயரில் ஒரு புத்தக வெளியீட்டுக்கழகம் நிறுவி ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஊக்க மூட்டலாமா? என்ற பிரச்னை மீது பல பல அறிஞர்கள் பேசிக் கொண்டிருந்தபோது திரு. சுப்பு அவர்கள் இந்தச் சிலை பற்றிய கதையைச்சொன்னார்கள். அவர் சொன்ன கதை இது:

சிலை சிரித்தது

எங்கள் தமிழ் நாட்டிலே, ஒரு பட்டினத்திலே புகழ்பெற்ற தலைவர் ஒருவருக்குச் சிலை செய்துவைத்து விழா நடத்தச் சில பிரமுகர்கள் தொடங்கினார்கள். படாதபாடுபட்டுப் பத்தாயிரம் ரூபா சேர்த்தார்கள்.

பணம்சேர்த்த சபையார் தங்களின் போக்குவரவுச் செலவுக்காக எண்ணாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டார்கள். பாவம் விழா நடாத்தும் கமிட்டியார் பெற்றுக்கொண்டது இரண்டாயிரம் மாத்திரந்தான்.

அதில் சிலைசெய்யும்சபையாருக்கு ஐந்நூறு ரூபாவைக் கொடுத்தார்கள்' மிகுதியான ஆயிரம் ரூபாவை விழாச்செலவுக்கு என்று ஒதுக்கிக்கொண்டார்கள். இன்னும் ஒரு ஐந்நூறு ரூபா இருக்கிறதே அது யாருக்குச் சேர்ந்தது தெரியுமா? சிலையைப் பாராவது எதிர்க் கட்சியார் உடைத்துவிட்டால் என்ன செய்வது? தலையைச் சுற்றி ஒரு இரும்புக்கூடு போட வேண்டும் என்று ஒருவர் சொன்னார். அவர் சொன்னதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. வாழ்நாள் முழுவதும் சிறையில் இருந்த தலைவர் அல்லவா? சிலையாக இருந்தாலும் சிறையில் இருப்ப[illegible]வே முறை? எனவே இ[illegible]க் கூட்டுக்கமிட்டியாரிடம் மிகுதி போய்ச்சேர்ந்தது.

சிலை செய்யும் கமிட்டியார் தலைவரின் உருவத்தை அழகுற அமைக்கச் சிற்பி ஒருவனைக் கூப்பிட்டு அவனிடம் பணத்தைக் கொடுத்தார்கள். ஏழைகளுக்காகப்பாடுபட்ட தலைவர் தானே. நாமும் ஏழைதானே ஆனபடியால் இந்தப்பணத்தை நான் எடுத்துக்கொண்டால் தவறில்லை என்று எண்ணிய சிற்பி பணம் முழுவதையும் செலவளித்தான். நாள்நெருங்க நெருங்க அவன் மனம் படபடத்தது. கடைசியில் அவன் துணிவுகொண்டான். இந்த ஊருக்கு மழை எங்கே வரப்போகிறது? என எண்ணி, களிமண்ணிலே உருவத்தைச் செய்து 'திக்கல்' வர்ணம் அடித்துக் கொடுத்துவிட்டான்.

புண்ணிய புருஷராகிய மந்திரி ஒருவர் திறப்பு விழாவுக்கு வந்தபடியால் சோனாவாரியாக மழை பெய்துவிட்டது. பாவம்! மண்ணிலே செய்தசிலை திறப்பு விழா அன்றைக்கே மண்ணோடு மண்ணாய்விட்டது. சாதுர்யம் மிகுந்த அவர் ஆஹா! நமது தலைவர் இந்த மண்விடுதலைபெற உழைத்தவரல்லவா? அதனால் இன்று அவர் மண்ணோடு மண்ணாய்ப்போய்விட்டார் என்று ஜமாய்த்துவிட்டார்.

இவ்வளவோடு
சுப்பு அவர்கள்
நிறுத்தவில்லை. நிறுத்
தால் அது வெறும்
கலைக்கதையாகவே
ருக்கும். ஆனால் சுப்பு
கள் அருமையான
ஒன்றை இதனோடு
இக்கதைக்கு உயிர்
தார். ஓர் ஏழைக்குடி
பசி மிகுதியினால் சில
ளைச் சாப்பிட்டுக்
அந்த வழியால்
அருமையான மண்
யும் தண்ணீர் தங்
வமாக இருந்ததையும்
சில விதைகளை அந்
வைத்த இடத்திலே
வைத்தான். அந்தக்
இடத்திலே பழம்
தொங்கும் மரம்
கண்கொள்ளாக்காட்
இருந்தது. வேறொரு
ஒரு நாள் பசியுடன்
வழியாக வந்தான்.
இந்தப் பழமரம் க
பட்டது. ஆவலாகத்
களை நீட்டிச் சில ப
பிடுங்கினான். அவ
சாப்பிட்டான்.
அப்போது ஒரு குரல்
டது. சிரிப்போடு அந்
பேசியது சிலையாகி நின்
போது மரமாகி நிற்
தத் தேசியத் தலைவரின்
தான் அது.
''அவசரப்படாதே தம்
தலாகச் சாப்பிடு. வயி
யச் சாப்பிடு'' அந்
வீகக்குரலின் சிரிப்
வார்த்தைகளையும்
அவன் திகைக்கிறான்.
-மரமாகி நின்ற தலைவ
கதையை அவனுக்கு எ
சொல்லி 'இதுதான்
மனம் குளிர்ந்தது' என்
கறைந்தார்.
வெறும் சிலை வே
பயனுள்ள பழமரம்போ
வும் செயலில் ஈடுப
என்பதுதான் தத்துவ
றன் மேலொன்றுக
ரசனையோடு நல்ல தத்
சேர்த்துக் கலைமணி
சொன்னகதை என் செ
அப்படியே பதிந்துவி

இரசிகமணி
கனகசெந்திநாத

தில்லு-முல்லு

மா மறைந்த மாயம்

''பாண் எங்களுக்கு வேண்டாம். அதை மாவாய்த் தாருங்கோ எண்டு சனங்கள் ஏன் கத்துது?

"மாவாய் வாங்கினால் ஒரு பிட்டை, இடியப்பத்தை, தோசையை, ரொட்டியை தாங்களாய்ச் செய்து சாப்பிடலாமெண்டுதான்."

"பாணை வாங்கிவிட்டால் உந்தக் கரைச்சல் ஒண்டும் இராதே! வாங்கினவுடனேயே அதை வாயுக்குள்ளை போட்டிடலாம்."

"அது சரிதான். எண்டாலும் சனங்களுக்கு அது அவ்வளவாய் புடிச்சுக்கொள்ளேல்லை. மாவை வாங்கி வைச்சுக்கொண்டால் நினைச்ச நேரம் வேண்டிய அளவுக்கு எடுத்துப் பலகாரம்செய்துகொள்ளலாம். காலமை வாங்கிற பாண் பொழுதுபடக் காய்ஞ்சுபோயிடும். அதுவுமல்லாமல் எங்கடை ஆக்களுக்கு பொதுவாய் பாணெண்டால் அவ்வளவு புடிக்காது."

'இந்தக் காலத்திலை உப்பிடியெல்லாம் வாய்க்குருசை பார்க்கப்படாது."

'மாவைப் பாணாக்காமல் பச்சை மாவாய்த் தாருங்கோ எண்டால் அதிலை என்ன வந்திட்டுது? அரசாங்கத்துக்கு அதாலை என்ன கஷ்டம்? பேக்கரிக் காரரிட்டை குடுக்கிறதை எங்களிட்டை தாருங்கோ!

"நாங்கள் அதைப் பலகாரம்செய்தாலும் சரி, சும்மா பச்சையாய்க் கரைச்சுக்குடிச்சாலும் சரி, உங்களுக்கென்னசெய்யுது?"

"அப்பிடியே மாவாய் உங்களுக்கு தந்திட்டாலும் பேக்கரிக் காரருக்கு என்னத்தைக்குடுக்கிறது?"

'இதென்ன கோதாரி! அவையளுக்கும் கூப்பனுக்குத் தக்கினது குடுக்கிறதுதான்!'

"ஐயையோ! மூட்டை மூட்டையாய் வாங்கினவைக்கு கூப்ப என்னத்தைக் காணும்?"

'மூட்டை மூட்டையாய் திண்டு வந்தவையோ இவ்வளவு நாளும்?,

'கொஞ்சத்தைப் பாணாக்கி சனங்களுக்கு குடுத்திட்டு மிச்சம் மா மூட்டையளை அவையள் தின்டிட்டினம்!'

'பகிடியோ மெய்தானோ?'

பகிடியுந்தான். மெய்யும்தான். பாணுக்கெண்டு அரசாங்கம் குடுக்கிற மாவிலை கொஞ்சத்தை இரகசியமாய் கள்ளச் சந்தையிலை வித்துச் சாப்பிட்டுவிடுவினம்.

'எட நாசமறுவார்! அப்ப கவுண்மேந்துக்கு இந்த விளையாட்டைப்பற்றி ஒண்டும் தெரியாதோ?'

'தெரியுமோ தெரியாதோ எனக்குத்தெரியாது. பட்டணத்திலை சில பேக்கரியளிலை இரவு பதினொரு மணிக்கு ஊர் அடங்கினபிறகு இந்த வேலை நடக்குதாம். ஒரு மூடை மாவுக்கு கள்ளச் சந்தையிலை என்ன விலை தெரியுமே? முன்னூறு ரூபாய்! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மூடை தட்டிவிட்டால் மாதமுடிய என்ன கிடைக்கும்பார்!"

'இந்தப் பஞ்ச காலத்திலை, இப்பிடி சனங்களின்ரை வயித்திலை அடிக்கிற வேலையை பாத்துக்கொண்டு அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டிருக்குமெண்டோ? எத்தினையோ இன்சுப்பெக்டர்மார் இருக்கினம், பொலிஸ் இருக்குது-மிலிட்டரி இருக்குது இப்பிடி எல்லாரும் இருந்தும் இந்தக் களவுகள் நடக்கவோ?"

'இந்தக் காலத்திலை சாவன்னா சூனா எல்லாத்தையும் செய்விக்கும். கொழும்பிலை இருந்து யாழ்ப்பாணம் வரும்வரையுக் கொச்சிக்கடை, புத்தளம், அனுராதபுரம், வவுனியா, ஆனையிறவு இந்த அஞ்சு இடங்களிலை பாரியர் போட்டிருக்கினமாம். காசுக்கு முன்னாலை இந்தப் பாரியர் எல்லாம் தவிடுபொடியாய் போயிடுமாம். காசிருந்தால் ஒருத்தர் எந்த நேரமும், எத்தின நேரமும், எந்தப் பொருளையாவது எந்த இடத்திலையிருந்தும் எந்த இடத்துக்கும் கொண்டுபோகமுடியுமாம். சாவன்னா சூனா முந்தித்தான் கண் கண்ட தெய்வம். இப்ப அது கண்கண்ட பரம்பொருள்!"

"சோஷலிசம் சோஷலிசம் எண்டு கத்திக்கொண்டு திரியினம் பாண்காறரைப் போலை இப்பிடி இடையிலை இருக்கிற ஆட்கள் கொடிப்பொழுதிலை முதலாளியாய் வந்திட்டால் பேந்தென்ன சோஷலிசம்?'

இதை, முதலாளித்துவ சோஷலிசம் எண்டு சொல்லுறது! முதலாளிமார் எல்லாரும் சேர்ந்த சோஷலாய்ப் புழங்கிறது. இடியப்பம் அவிக்க மா கிடைக்காத மர்மம் இப்ப விளங்கிச்சுதோ?"

— அந்நான்

வேகமாக வளரும் இளம் தலைமுறை

கப்பலோட்டும் தமிழர்கள்

[12]

புதிய பரம்பரை ஒன்று வெகு வேகமாக இன்று உருவாகிக்கொண்டிருக்கிறது.

அதை உருவாக்கிக்கொண்டிருப்பவர்கள் - வல்வெட்டித் துறையிலுள்ள இளைய தலைமுறையினர்தான்!

திகில் நிறைந்த பல துணிகரச் சாகசங்களை ஆழ்கடலின் பேரலைகளோடு நடாத்திய வல்வெட்டித்துறை கடலோடிகளின் வாரிசுகள்தான் இவர்கள்.

—அஞ்சா நெஞ்சத்தோடு ஆண்டாண்டு காலமாக கடலோடு கொஞ்சி விளையாடிய விண்ணுதி விண்ணர்களின் நினைவுச் சின்னங்களாக வெளிநாட்டுக் கப்பல்களில் வல்லை முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கும் எண்பதுக்கு மேற்பட்ட வாலிபர்களைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

கடலோடும் கலையில் தோய்ந்து எழும்பியவர்களின் வாரிசுகள்பற்றித்தான் எழுதுகிறேன்.

இந்த அத்தியாயத்தைஎழுத வைத்தவர் என் இனிய நண்பர் அருட்பிரகாசம்.

...ஒரு காலத்தில் கடலோடியாகத் திகழ்ந்த சபாரத்தினத்தின் புதல்வரான - என் நீண்டகால நண்பரான அருட்பிரகாசம் இப்போது கொழும்பு [illegible] யாற்றிக்கொண்டிருக்கிறார்; [illegible] விளையாட்டுத் துறையில் மட்டுமல்ல, ஆங்கில, தமிழ் இலக்கியங்களிலெல்லாம் ஈடுபாடு கொண்ட இவர் கடலோடு விளையாடும் கலையைப் பற்றிப் பேசினால் விடவேமாட்டார்.

வல்வெட்டித்துறைச் சந்தியில் 'கப்பலோட்டிய தமிழனு'க்காக அவருடன் நின்று கொண்டிருந்தேன்.

'எப்ப வந்தனீர்?,— இது அருட்பிரகாசம்.

சாரம் கட்டிக்கொண்டு, வெளிநாட்டு விலையுயர்ந்த ஷேர்ட் அணிந்து, கன்னத்[illegible] விட்டிருந்த சுமார் இருபத்தாறு வயது மதிக்கத்தக்க இளைஞரைப் பார்த்துத்தான் அப்படிக்கேட்டார்.

—கொழும்பிலிருந்து எப்போது வந்தார் என்றுதான் கேட்கிறார் என்று நினைத்தேன்

அதுதான் இல்லை...

கிரேக்க கப்பலில் பணியாற்றிக்கொண்டிருப்பவர் அந்த இளைஞர் என்பதைப் பின்னர்தான் அறிந்தேன்.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு ராமச்சந்திரன் என்ற அந்த இளைஞர் ஊருக்குப் பெற்றோரைப் பார்ப்பதற்காகவந்திருக்கிறார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு பாகிஸ்தானிலிருந்து 9,578 தொன் அரிசியுடன் 'அங்குலோஸ் கபிரியல்' என்ற கப்பல் வந்திருக்கிறதல்லவா! அந்தக் கப்பலில்தான் ராமச்சந்திரன் பணியாற்றுகிறார்.

தாயகத்துக்கு வந்த கப்பலில் இருந்து பெற்றோரைக் காண்பதற்காக வந்திருக்கிறார் அவர்!

''வீட்டுக்குப் போய்விட்டு எப்பவேண்டுமானாலும் திரும்பி

வாரும்!'' என்று அந்த
லின் கப்டன் இவரிட
னாராம்.
திறமைக்குக் கிடைத்
என்று ஊகித்துக் கொ
டேன்.
கொழும்பைவிட்டு
கப்பல் புறப்பட்டு வே
முகத்துக்குச்சென்றாலும்
தத் துறைமுகத்துக்கும்
கூடியவிரைவில் விமான
கட்டை அந்தக் கப்பல்
இந்த இளைஞருக்கு அ
வைக்கும்.
விடுமுறைக்காலங்களும்
வல்வெட்டித்துறை இ
களுக்கு இப்படித்தான்
டிக்கடி வந்துள்ளது.
குறிப்பிட்ட கப்பலில்
சந்திரனுடன் மற்று
வல்லை இளைஞர்கள்
யாற்றுகிறார்கள். இவ
வந்துள்ளார்கள்.

⁂

கொழும்புத்துறைமு
பத்தாண்டுகளுக்கு மு
கடமையாற்றிய குண
என்றவல்வெட்டித்துறை
சேர்ந்தவரைப்பற்றி
பிடாமல் இருக்க முடியா

''காப்டன்'' தரத்தில்
நுணுக்கங்களை முற்று
கற்றுத்தேர்ந்தவர். அந்
பிக்கற்றும் இவருக்கும் இ
தது.

துறைமுகத்திலிருந்
பெற்ற பின்னர், 1
ஆண்டு வல்வெட்டித்
லுள்ள பிரபல வர்த்த
தங்கவடிவேலுவுடன்
சேர்ந்துகொண்டார்.

குணசுந்தரத்தின்
யில் அளவற்ற நம்பிக்கை
திருந்தார் தங்கவடிவே
மீன்பிடித்தொழிலை
ல் செய்ய வேண்டு
நீண்டகால எண்ண
செயல்படுத்த விரும்பி
வடிவேல் ''ரோலர்'' ஒ

வோடு கலைமணி வர்கள் கதையை க்கே. திருத்தியிருந் வெறும் நகைச் தையாகவே இருந்தி ஆனால் கப்பு அவர் மையான தத்துவம் இதனோடு பொருந்தி ரு உயிர்கொடுத் ஏழைக்குடியானவன் யிலும் சில பழங்க ரப்பிக்கொண்டு ழியாக வந்தான். ன மண் குவியலை ணீர் தலைப் பக்கு குத்தலையும் கண்டு தகளை அந்தச் சிலை இடத்திலே போட்டு ர். எந்தச் சிலைவைத்த ல பழம் பழுத்துக் மரம் இருப்பது ள்ளாக்காட்சியாக . வேறொரு ஏழை பசியுடன் அந்த வந்தான். அவனுக்கு பழமரம் கண்ணிலே ஆவலாகத் தன் கை டிச் சில பழங்களை ன். அவசரமாகச் ான்.

ஒரு குரல் கேட் ப்போது அந்தக்குரல் லையாகி நின்று இப் ாகி நிற்கும் அந் பத் தலைவரின் குரல்

படாதே தம்பி, ஆறு ப்பிடு. வயிறு நிரம் '' அந்தத்தெய் சிரிப்பையும், தகளையும் கேட்டு கிறான். சிலையாகி ின்ற தலைவர் தன் வனுக்கு எடுத்துக் 'இதுதான் என் ர்த்தது' என்று கூறி

சில வேண்டாம். பழமரம்போல உத வில் ஈடுபடுங்கள் ள் தத்துவம். ஒன் ான்றாக ஹாஸ்ய நல்ல தத்துவமும் கலைமணி கப்பு தை என் நெஞ்சில் பதிந்துவிட்டது.

ரசிகமணி
செந்திநாதன்

மற்றவரைக் கவரும் கவர்ச்சிக் காந்தமாவது எப்படி?

தமது பண்பாலும் பண்பாட்டினாலும் தலைவராக உயர்ந்தோர் பலருளர். மகாத்மா காந்தி, இராஜாஜி, மார்ட்டின் லூதர்கிங் போன்றோரின் உயர்ச்சிக்கு இப்பண்புக்கலையே காரணமாகும்.

மற்றோருடன் சகோதர மனப்பான்மையுடன் பழகி, அவரவர் தேவையை அறிந்து, அதற்கேற்றவாறு தன்னையும் மாற்றி, அவர்களை ஒரு முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்பவன் மற்றோரை இலகுவில் வசீகரித்துவிடுவான். அவன் எவரிடத்தில் சிறு முன்னேற்றம் காணப்பட்டாலும் அதைப்பாராட்டி மேன்மேலும் அவனை ஊக்குவிக்கும் பண்புக்கலையை உடையவனாக மிளிரலாம்.

குறை கூறாமை, ஏளனச் சிரிப்பின்மை, மரியாதை, வீண் விவாதங்களைத் தவிர்த்தல் ஆகிய நான்கு காந்தக் கற்களை ஒருவன் தன்னகத்தே கொண்டுள்ளானாயின் அவன் மற்றோரைத் தன் பக்கம் கவர வல்லதோர் கவர்ச்சிக்காந்தமாக உருவெடுத்து விடுவான்.

குறைகூறாமை

உலகில் ஒருவரும் குறை கூறுதலை விரும்பமாட்டார்கள். ஏதாவது ஒரு பிழையை ஒருவன் விட்டாலும், அஃதோர் பிழை என்று அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். உலகம் முழுவதும் சேர்ந்து அஃதோர் பிழை என்று கூறினாலும், அவன் அதை ஏற்கமாட்டான்.

ஆதலால் ஒருவன் பிழை விட்டால் அப்பிழையைச் சுட்டிக்காட்டாமல் வேறுவிதமாக அவ் விடயத்தை அணுகியிருந்தால் அது சிறப்புற்றிருக்கும் என்று கூறுதல் சிறப்புடையது- பண்புமிக்கது.

ஏளனமாகச் சிரிக்காதீர்

தலைமை தாங்கத்துடிக்கும் ஒருவன் எந்நேரத்திலும் புன்னகை சிந்தும் பொறுமை ஒளி மிளிரும் முகத்துடன் காட்சிதரல்வேண்டும். அவனது வதனத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்துகொண்டே இருத்தல் வேண்டும்.

அவன் ஒருபோதும் மற்றோரின் முயற்சியை கண்டோ, அன்றேல் அவர்களது தவற்றைக் கண்டோ ஏளனச் சிரிப்புச் சிரிக்கக்கூடாது. குதிரைச் சிரிப்பினுள் குட்டிச்சுவராகிய தலைவர்கள் ஏராளம் ஏராளம். ஒருவனிடம் இருக்கும் தவறுகளைக் காணுமிடத்து தன்னுடைய அறிவுரைகளும் தேறுதல் மொழியும் ஊக்கமும் கொடுத்து அவனைத் தேற்றிடல் வேண்டும்.

''உங்களிடமிருக்கும் ஆற்றலையும் புத்திசாலித்தனத்தையும் மற்றோருக்கு எடுத்துக் காட்ட வல்லதோர் கருவியே நாவன்மை''.

ஒருவன் சிறுடைய ஆடை அணிந்து 'பளிச்' என்ற கவர்ச்சியுடன் விளங்கலாம். வேறொருவன் புன்சிரிப்பு என்ற ஆடை அணிந்து 'பளிச்' என்ற கவர்ச்சியுடன் விளங்கலாம். சிறுடை ஆடை அணிவதற்குச் செலவு நேரிடலாம். ஆனால் புன்சிரிப்பு என்ற ஆடையை அணியும்போதெல்லாம் செலவு ஏற்பட்டுவிடாது. அதனாலன்றோ 'புன்சிரிப்புக்குச் செலவொன்றுமில்லை. ஆனால் அதன் பெறுமதியோ விலைமதிக்கமுடியாத தொன்றாகும்' 'புன்சிரிப்பு மற்றவர்களுக்கு அளவிடமுடியாத சந்தோஷத்தைக் கொடுக்கிறது. புன்சிரிப்பு உமக்கும் மற்றோருக்கும் மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் கொடுத்து மற்றோரது நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெறக்கூடியதோர் விலைமதிக்க முடியாததோர் பொருளாகும்' என்று கருதப்படுகின்றது.

இனிய சொற்களைக் கூறும்போது ஒருவனுடைய அகத்திலும் முகத்திலும் அழகு கொஞ்சி விளையாடும். இன்னாத கொடுஞ்சொற்களைக் கூறிடும்போது ஒருவனது முகத்தில் அவலட்சணமும், அலங்கோலமும் தாண்டவமாடும். இவை தலைவிரித்தாடும் ஒருவனிடம் தலைமைப் பதவி நிலைத்து நிற்காது. ஆகவே தலைமைப்பதவியை என்றும் அலங்கரிக்க விரும்புபவனது நாவில் என்றென்றும் இனிய சொற்கள் கனிநடம் புரிந்திடல் வேண்டும்.

போலவிட்டுப் புறஞ் சொல்லித் திரிதலில் வல்லவர்களது தலைமை என்றென்றும் நிலைத்துநிற்பதில்லை. நீர் ஒருவனிடம் மற்றோரைப்பற்றி புறங்கூறும்போது, தான் சென்றபின் தன்னைப்பற்றியும் நீர் புறங்கூறுவீர் என்பதை அவர் இலகுவில் அறிந்து கொள்வார். மற்றோரில் காணப்படும் குறையை மறந்து அவரது நிறையைப் போற்றிப் புகழுதல் தலைவனுக்கு அமைய வேண்டிய மற்றொரு நற்பண்பாகும்.

மரியாதை

மற்றோருடன் நற்பண்புடன் நடப்பவன் மட்டுமே, மற்றோரினால் மரியாதையாக மதிக்கப் படுவான்.

சிறந்த தலைவன் ஒருவன் தனது குழுவிலுள்ளோருடன் மிகவும் மரியாதையுடன் நடந்துகொள்வான். அவன் அவர்களுடன் அன்புடைத் தோழமையுடனும் பண்புடை வாஞ்சையுடனும் பழகுவார். 'ஒருவனுடைய பெயரே அவனுக்கு இப்புவியில் இனிமை' என்ற உண்மையை அவன் நன்கறிந்ததனாலும் தன்னுடன் கூடிக்குலாவும் நண்பர்களது பெயரை ஞாபகம் கொண்டு அவர்களை அவர்களது பெயரினாலோ அன்றேல் அவர்களுக்கினிய அவர்களது சிறுபெயரினாலோ, செல்லப் பெயரினாலோ அழைப்பான்.

சீரிய தலைவன் ஒருவன் வீண் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்வான். ஏனெனில் 'உலகின் விவாதத்தில் வெல்லுவோர் இலரே''-என்ற உண்மையையும் ''வீண் விவாதத்தில் ஈடுபட்டால்தான் இழப்பது. வீண் நேரத்தை மட்டுமல்ல, ஓர் அரிய நண்பனையும் கூட'' என்ற பேருண்மையினையும் அவன் நன்கறிவான்.

''நான் இன்றே நாளையோ விரைந்து தலைவனாகிவிடுவேன்'' என்ற குன்றாத உறுதியுடனும் குலையாத நெஞ்சத்துடனும் மாறாத உயிர்த்துடிப்புடனும் வாழ்ந்திடல்வேண்டும். இன்று நீங்கள் பதவிக் குறைந்தவர்களாக இருக்கலாம், பேச்சுக்கலையில் மெல்ல மெல்ல அடியெடுத்துவைப்பவர்களாக இருக்கலாம், பண்புக்கலையினைப் பயின்றவண்ணமிருக்கலாம். ஆனால் தலைவன் ஆகிவிடல் வேண்டும் என்ற இலட்சியத்தினை மறந்திடல் ஆகாது. நீங்கள் இவ்விலட்சியத்தினை நினைக்கும்போதெல்லாம் தலைவனுக்குரிய கலைகள் உங்களிடம் தவழ்ந்துகொண்டிருக்கும். விடாமுயற்சி, ஆர்வம், கடும் உழைப்பு ஆகிய ஏணிகளின் உதவியினால் நீங்கள் அத்தலைமைப் பதவியினை எட்டிப் பிடிப்பது நிச்சயமே.

உத்தம தலைவன்....

ஓர் உத்தம தலைவன்தான் உறுதிபூண்ட எவ்விடயத்தையும் வெற்றிபெறும் நோக்குடனேயே அணுகுவான். அவ்விடயத்தைப் பூரணத்துவம் அடையச் செய்வதற்குத்தேவையான உற்சாகம் அவனுள் பொங்கிப் பெருகிய வண்ணம் இருக்கும். அவனிடம் அதிகபொறுப்புணர்ச்சியும், மற்றவர்களுக்காகவும் தனது சமூகத்தினது மேன்மைக்காகவும் பாடுபடும் தன்மை மலிந்து காணப்படும். இந்நற்பண்புகளினால் அவன் பலரிடமிருந்து நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் இலகுவில் பெற்றுவிடுவான்.

அவன் தனது அலுவல்களில் ஒரு முன்னோடியாக—எல்லோரும் பின்பற்றக்கூடிய சீரிய நடவடிக்கைகளை எடுத்தாள்வான் அவன் பங்குபற்றும் நிகழ்ச்சிகளெல்லாம் களைகட்டிவிடும். அவனது சூழல் கண்ட நிகழ்ச்சிகளெல்லாம் 'கலகலப்பாக' மாறிவிடும். அவனது வரவால் எந்தவோர் இடமும்—எந்தவோர் விழாவும் ஒரு புதுப்பொலிவுடன் துலங்கும். ஆகவே, அவனது வரவை மற்றோர் எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டே இருப்பார்கள். அவனது நிழல் படாதவோர் நிகழ்ச்சி விழா

(7-ம் பக்கம் பார்க்க)

க. குகதாசன்

ன்று அந்தக் கப்ப இவரிடம் கூறி

க்கிடைத்த பரிசு த்துக் கொண்

பவிட்டு அந்தக் பட்டு வேறுதுறை சென்றாலும். அந் கத்துக்குப் போகக் ில் விமான டிக் க் கப்பல் கம்பனி ருக்கு அனுப்பி

காகவும் பல துறை இளைஞர் படிக்கான்சிலான ள்ளது.

கப்பலில் ராமச் மற்றும் இரு ைஞர்கள் பணி கள். இவர்களும் கள்.

ஃ

த்துறைமுகத்தில் ளுக்கு முன்னர் றிய குணசுந்தரம் ட்டித்துறையைச் ப்பற்றி குறிப் க்க முடியாது!

தரத்தில் கப்பல் ா முற்றுமுழுதாக தவர். அந்த சரிடி வருக்கும் கிடைத்

லிருந்து ஓய்வு ன்னர். 1967-ம் வெட்டித்துறையி ல வர்த்தகரான லுவுடன் இவர் ண்டார்.

த்தின் திறமை நம்பிக்கையைத் ங்கவடிவேல். தொழிலைப் பெரியன வேண்டுமென்ற எண்ணத்தைத் விரும்பிய தங்க ாலர்' என்ற வாங்குவதற்காக இவ்விரைந்து சென்றார்-குணசுந்தரத்துடன்!

இங்கிலாந்தில் லிவர்பூலில், கப்பல் கம்பனியொன்றிடமிருந்து பதினைந்து லட்சம் ரூபாய்க்கு ரோவரை வாங்கினார்கள்!

தன்னந்தனியனாக, ஆரின் உதவியுமின்றி தங்கவடிவேலு குணசுந்தரத்தின் மீதுள்ள திறமையின் நம்பிக்கையில் இந்த ரோவரை இவ்வளவு விலை கொடுத்து வாங்கினார்.

இலங்கையிலேயே தனிநபர் ஒருவர் இப்படியான ஒரு ரோவரை இவ்வளவு விலை கொடுத்து வாங்கிய பெருமை தங்கவடிவேலுவையே சாரும்!

அந்தக்கப்பலின் காப்டன் குணசுந்தரம்.

இலங்கைக்குக்கொண்டுவரப் பட்ட ரோவர் ஆழ்கடலில் மீன் பிடித்தது. ஒரு வருட காலம் — சோதனை நிறைந்த காலமாக இருந்தது அவர்களுக்கு.

நஜூவேலால்

தங்கவடிவேலு மனம் தளரவில்லை. உலகத்தின் பல இடங்களுக்கும் சென்று வந்தவர் தங்கவடிவேலு. எத்தனையோ லட்சம் ரூபாவை முடக்கிவிட்டோமே என்ற கவலைகூட இல்லாமல் சோதனை ஒன்றை நடாத்தியவர் திருப்தியுடன் ரோவரின் கதையையும் முடித்துக்கொண்டார்.

இதன் பின்னர் குணசுந்தரம் கிரேக்கக் கப்பல் ஒன்றில் காப்டனுக்கு அடுத்த தானத்தில் சேர்ந்துகொண்டார்.

—கனடாவுக்குச் சமீபத்திலுள்ள ஆழ்கடலில் அந்தப் பயங்கரம் அவருக்கு நேர்ந்தது.

எண்ணெய் ஏற்றிக்கொண்டு வந்த அந்தக்கப்பலின் முக்கிய பாகமான 'ரோல்' உடைந்து கப்பல் இரண்டாகப் பிளந்தது!

—அபாய அறிவிப்பு அனுப்பப் பட்டது. ஆனாலும்—

கப்பலில் குணசுந்தரத்துடன் அனைவருமே கடலுக்குள் மூழ்கி இறந்துவிட்டதாகவே தகவல் வந்தது!

கடலோடு இணைபிரியாத குணசுந்தரத்தின் கதை கடலோடு முடிந்தது.

அவர் வாழ்வு முடிந்து மூன்று கூட ஆகவில்லை.

அவர் பெற்ற புதல்வர்கள் இருவரும் வெளிநாட்டுக்கப்பல்களில் பணியாற்றச்சென்றுவிட்டார்கள்.

புலிக்குப் பிறந்தவர்கள் பூனையாவார்களா?

ஃ

வெளிநாட்டுக் கப்பல்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுள் இளைஞரான வெங்கடாசலம் கார்த்திகேசுவை மறக்கமுடியாது.

துணிவும், ஆற்றலுமிக்கவர், குறுகிய காலத்தில் கிரேக்க கப்பலில் முன்னேறிக்கொண்டு வருபவர்.

ஆறு வருடங்களுக்குள்—முப்பது பவுண் சம்பளத்திலிருந்து நூற்றி இருபத்தைந்து பவுண் சம்பளம்பெறும் அளவுக்குமுன்னேறிவிட்டவர்.

வெளிநாட்டுக் கப்பல்களில் சேரும் இளைஞர்களுக்கு முதலில் அங்கு கொடுக்கப்படும் வேலை மிகமிகக் கடினமானது. ''டெக்போய்'' தான்.

—பெயின்ற் அடிப்பது, சுரண்டுவது, அதை இதை எடுப்பது போன்ற வேலைகள். அதிலிருந்துமுன்னேறவேண்டியது அவரவர் திறமையைப் பொறுத்தது.

வல்வெட்டித்துறை இளைஞர்களைப்பொறுத்தவரையில் முன்னேற்றம் வெகு வேகமானது.

ஆபிரிக்கா, அமெரிக்கா இங்

(2-ம் பக்கம் பார்க்க)



நங்கையா! நாற்காலியா?

இங்கு காட்சிக்கிருப்பது நங்கையா அல்லது 'நாற்காலி'யா என்ற திகைப்பு உங்களுக்கு ஏற்படுவது சகஜம்தான்! இரண்டுமே கவர்ச்சிப் பொருட்களாக இருப்பதில் தான் இந்தப் பிரச்சினை அல்லவா?

உண்மையில் இங்கு காட்சிக்கிருப்பது நங்கை அமர்ந்திருக்கும் நாற்காலிதான்! நாற்காலி என்றால் நான்கு காலுடைய இருக்கை மட்டும் தானா என்று எம்மை நாமே கேட்க வைத்திருக்கிறது இந்த நவீன இருக்கை! எளிமையில் இன்பம் காணும் ரசிகர்களுக்கு ஏற்ற இந்நாற்காலி ஸ்பஞ்சுபோன்ற பிளாஸ்டிக் நுரையில் அமைக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற வீட்டுத் தளபாடக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இந்நாற்காலி பல பெண்களின் கவனத்தை கவர்ந்தது.

பரிசு நாவல்

அத்தியாயம் 24

மட்டுவில் தங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ராசு அங்கு வரவில்லை. ஆனால் அவன் அங்கு தங்குவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் தானாகவே உருவாகத் தொடங்கின.

தையல்காரப் பாக்கியம் உண்மையிலேயே அவனைப் பயமுறுத்தித் திருப்பி அனுப்பத்தான் நினைத்தாள். ஆனால் அனாதையாக யாருமற்றுத் தனியே நிற்கும் அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

'தம்பி! நீங்கள் இவ்வளவு நாளும் எங்கை தங்கி இருந்தவன்' அன்போடு கேட்டாள் அவள். 'நானெக்கா அனுராதபுரத்திலை ஒருதரோடை நின்டனான்.'

'உன்னைச் செத்துப் போச்சுதெண்டு உன்ரை கொம்மாவின்ரை அண்ணன் தம்பி எல்லாரும் நினைச்சுக்கொண்டிருக்கினம்; நீ என்னடாவெண்டால்......'

'இன்னும் இவன் ஏன் சாகாமல் இருக்கிறான் என்று நினைக்கிறியே?'

'இல்லை ராசா! அவங்கள் பொல்லாதவங்கள். ஆகையால் நீ கொஞ்சம் கவனமாய் உலாவவேணும். செய்யாத குற்றத்திற்கு செல்லம்மாவின்ரை மேனியிலை பழியைப் போட்டு இந்த ஊரைவிட்டே துரத்தின பாவியள்... பெருமூச்சோடு கூறினாள் பாக்கியம்;

ராசாவுக்கும் அது தெரியும். செல்லம்மாவின் குடும்பமும் அவன் குடும்பமும் ஒருவகையில் உறவினர்தான். ஆனால் ராசுவின் தகப்பன் தாழ்ந்த சாதிக்காரன். அதனால்தான் ராசுவின் குடும்பம் ஒதுக்கப்பட்டிருந்தது. செல்லம்மாவின் குடும்பம் அந்த ஊரில் எத்தனையோ தலைமுறைகளாய் வாழ்ந்துவந்தது. அந்தக் குடும்பத்தின்மீது இவர்களுக்கெல்லாம் பொறாமை. அதனால் வைத்திலிங்கம் ராசுவின் தாயின் தமையன் சகோதரர்கள், அவர்களது மனைவி எல்லோருமாகச் சேர்ந்து செல்லம்மாவின் மகனுக்குத் திருட்டுப் பட்டம் சூட்டி ஊரைவிட்டே போகும்படி செய்தார்கள். ஒரு குடும்பம் நல்ல நிலையில் வாழ்வதையே சகிக்க முடியாதவர்கள் தாம் அனுபவிக்கும் இன்பத்தில் பங்கு கேட்க வந்திருக்கிறான் என்றால் சும்மா விடுவார்களா. ராசு அந்த எண்ணத்தோடு வந்திருக்காவிட்டாலும் அவன் அவர்களுக்கு எதிரிதானே.

ராசுவிற்கு அந்த ஊரில் நிற்கவே பிடிக்கவில்லை. அவனுக்குத் தொழில் ஏதாவது செய்து பிழைக்கவேண்டுமென்னும் அவா.

அனுராதபுரத்தில் அவனுக்கு நல்ல வசதி இருந்தது. ரவுனில் கடலை, கச்சான், சோடா விநியோகிக்கும் கடையொன்றிருந்தது. அவைகளை விற்றுக் கொடுத்தால் விற்பவர்களுக்கு ஏதாவது கொமிஷன் கிடைக்கும். முதல் இல்லாத வியாபாரம் அது. ஆனால் மட்டுவிலில்...?

ராசுவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சபா வரச்சொன்னதால் பாக்கியத்திடம் விடை பெற்றுக் கொண்டு சபாவின் வீட்டை நோக்கி நடந்தான்.

சபா அப்போதுதான் வெளியே யாரையோ பார்க்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். "ராசு! என்ன போறதிற்கு ஆயத்தமோ?"

"பின்னே என்ன செய்வது? இஞ்சை என்னாலை ஒரு நிமிஷமும் நிக்க ஏலாது. எல்லாரும் என்னைப் பிடிச்சு விழுங்கத் திரியினம். இப்பிடியான ஒர் சனப்பிறவி நான்..."

ராசுவின் குரல் தழுதழுத்தது.

"ராசா இந்த உயர் வர்க்கத்தின் குணமே அதுதான். நீ... கலப்புச்சாதி என்னிறதுக்காக அவையுன்னை விரட்ட நினைக்கேல்லை, உன்ரை கொம்மாவின்ரை காணி பூமியை நீ எடுத்துப்போடுவாய் என்னிறதுக்குத்தான் அவையள் இப்பிடி நடக்கினம்".

"நீ சொல்லுறது பிழை சபா... சாதியும் இதுக்குக் காரணம். நான் அவங்களுடை சாதிக்காரர் ஒருத்தருக்கு மகனாய்ப் பிறந்திருந்தால் எனக்காக வாதாட ஒருத்தராவது வந்திருப்பினம்... ஆனால்... நான்... எனக்கு இந்தச் சொத்து ஒண்டும் வேண்டாம். நான் உழைச்சுவாழ ஆசைப்படுறன்... சபா... உழைச்சு வாழ ஆசைப்படுறன்."

உணர்ச்சிக் கொந்தளிப்போடு ஆவேசமாகப் பேசினான் ராசா.

"உனக்கு என்ன... வேலை தெரியும்... மண்வெட்டி பிடிக்க வெருளுவியே..."

சபாவின் கேள்வி ராசாவைத் திணறச் செய்தது. உண்மையில் அவன் உழைத்து வாழ ஆசைப்பட்டாலும் அவனுக்கு என்ன தொழில் தெரியும்?

ராசா பதில்பேசாது விக்கித்து நின்றான்.



"ராசு... நான் உனக்கொரு தொழில் காட்டுவன்... நீ இஞ்சை நின்டு பழகுவியே..."

"நான் நிப்பன்... சபா... ஆனால் வைத்திலிங்கம்..."

சபாவுக்கு ஆத்திரம் பீறிட்டது.

"நாம் நேர்மையாய் இருந்தால் உந்தச் சட்டம்பியள் எங்களை ஒண்டுஞ் செய்ய ஏலாது. இது உன்ரை பிறந்தமண். இதிலை நீ நிக்க அதிகாரமில்லையெண்டால்... இலங்கையைச் சுதந்திரநாடு எண்டு சொல்லி என்ன புண்ணியம்?"

ராசுவை மிகக் கோபமாக ஏசினான் சபா.

"டேய் ராசு... உன்னோடை என்னைக் கதைக்கக் கூடாதெண்டு எத்தினை கடி அடிச்சவை...நான் எதிர்த்தபடியால்தான் இந்த இடத்திலை நிண்டு உன்னோடை கதைக்க முடியுது.

உரிமை வேண்டுபவன் உணர்ச்சியோடு போராடவேணும். கேட்டால் தான் எதுவும் கிடைக்கும். வலியவந்து உரிமைகள் கிடைப்பதில்லை... இது உன்ரை உரிமையான இடம். கேட்டுப் பெற்றுக்கொள் ... இல்லாது பயந்து ஒதுங்கிறாயோ ... உன்னைக் கொலையே செய்துபோடுவாங்கள்... என்னவோ ... உன்ரை விருப்பம் யோசிச்சுச் சொல்லு."

"நான் பயப்படேல்லைச் சபா...ஏன் வீண் கரைச்சலுவாவெண்டு யோசிக்கிறன்."

"கரைச்சலெண்டு நினைச்சியோ நீ வாழமாட்டாய்..."

உறுதியோடு கூறினான் ராசா.

"சரி...சரி நான் நிக்கிறன் என்ன வேலை எண்டு சொல்லு..."

"நெசவு அடிக்க விருப்பமென்டால் சொல்லு... நான் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுறன்."

ராசுவுக்கு அந்த வேலை மிகவும் பிடித்துவிட்டது.

சபா அவனை உடனடியாகச் சங்கத் தலைவரிடம் அழைத்துச்சென்று பேசி...ஒருமாதிரி நெசவு நிலையத்தில் சேர்த்துவிட்டான்.

ராசுவுக்கு முதலில் அது கஷ்டமாகத்தான் இருந்தது. போகப்போக அவன் நல்ல நிலைக்குப் பழகிவிட்டான்.

ராசுவுக்கு அந்த இடத்தில்தான், தொழிலாளர்களது கஷ்டநஷ்டங்களை கண்டுகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. தொழிலாளர்களைப்பற்றி அவன் நன்கு அறிந்துகொண்டான்.

அந்த நூல் நிலையம் ராசுவைப் பொறுத்தளவில் தொழிலாளர்சக் நிலையும் அவர்களது உயரிய செயல்களையும் கற்றுத் தேறக்கூடிய ஒரு புத்தக (நூல்) நிலையமாகவே விளங்கியது.

அவனுக்கு வைத்திலிங்கம் இடையிடையே தொல்லைகள் கொடுத்தாலும் அதிலிருந்து நாசுக்காக அவன் தப்பித்துக் கொண்டேவந்தான்.

சேலை, சாரம், துவாய் நெய்வது மட்டுமல்லாது தையல் வேலைகள் செய்வதிலும் அவன் சற்று நிபுணத்துவம் பெற்றிருந்தான்.

அவனது தையல்கலை ஆசான் பாக்கியம்தான்.

ராசு இப்போதெல்லாம் கவலைப்படுவது கிடையாது. இடைக்கிடையே தாயையும் தமயனாரையும் நினைப்பான்.

நந்தினி சேவியர்

அருள், கண்மணி, மெலிக்கா போன்றோரும் அவன் ஞாபகத்திற்கு வருவார்கள்.

அவனுடைய வாசஸ்தலமே அந்த நெசவு நிலையக் கட்டிடத்தான். இடையிடையே பாக்கியம் வீட்டிற்கும் போய் வந்துகொண்டிருந்தான்.

ஒரு நாள் சபா, ராசுவிடம் ஓடிவந்தான்.

"ராசு நான் ஜே பி. ஓ. வாய் எடுபட்டிருக்கிறன்... இன்ரவியூவிலை என்னையும் எடுத்திட்டாங்கள்".

"மெத்தச்சந்தோசம் ... நல்லாய்ப் படிச்ச முன்னுக்கு வா..." என்று மகிழ்ச்சியோடு கூறினான் ராசா.

"ராசா...நான் நாளையின்டைக்கே கட்டுப்பொத்தைக்குப் போகவேணும். அதுதான் உன்னோடை சொல்லவந்தனான்."

"அதுக்கென்ன போறும் சரி..."

"என்னடா பகிடிவிடுகிறாய் நான் என்ன சொல்லவந்ததெண்டு கேக்காமல்."

"சரி சொல்லுகேக்கிறன்."

"நான் போனப் பிறகு... இஞ்சை என்ன நடந்தாலும் நீ...இந்த இடத்தை விட்டுப் போகக்கூடாது".

"அது எப்பிடி முடியும்...? என்னை உயிரோடை விட்டு வைச்சால்தானே நான் போறதுக்கு...?"

"ஏன்ரா... அப்பிடிச் சொல்லுறாய்?"

"நீ நினைக்குமாப்போலை நான் இஞ்சை நிக்கிறது அவ்வளவு சுலபமில்லையடா...வைத்திலிங்கத்தார் சங்கத்தலைவரையும், காரியதரிசியையும்புடிச்சு வெருட்டி என்னைச் சங்கத்தைவிட்டு விலத்தச்சொல்லி இருக்கிறாராம்."

"என்ன... அவ்வளவு தூரத்துக்கு வந்திட்டுதே...?"

"இந்தச் சங்கக் கட்டிடமே வைத்திலிங்கத்தாற்றை காணியுக்கைதானும் கட்டிக்கிடக்குது, தவிர, காரியதரிசியின்ரை வீடுகளும் அவற்றை காணியுக்கைதானும் இருக்கு. என்னாலை...பாவம் அதுகள்..."

"அவை என்ன சொன்னவையாம்?"

"காணி இல்லாட்டாலும் பரவாயில்லை; என்னை விலத்த ஏலாது" எண்டு சொன்னவையாம்...ம்... பார்த்தியே சபா...தொழிலாளர்களுடைய ஒற்றுமையை. தங்களுடைய சகோதரியின் வயிற்றிலை உற்பவித்த என்னை... எனது இரத்தம் கலந்து நிறைந்த அவர்கள் என்னை வேற்றுச்சாதிக்காரனென்று விரட்டுகிறார்கள். ஆனால் எங்கையோ இருந்த பின்தள்ளப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இந்தத் தொழிலாளிகள் எனக்காக தமது கூட்டத்தைச்சேர்ந்தவனென்பதற்காக வாதாடுகிறார்கள். எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

இதுதான் சபா வர்க்க வித்தியாசம். தொழிலாளி தொழிலாளிதான். அவன் கையில் தான் உலகம்..."

"ம்...இப்ப...என்ன செய்யிறது...இஞ்சை ஏதேனும் நடந்தால் நான் சொல்லுற இடத்துக்கு நீ போறியே...?"

"என்னவோ அப்பா... நீ தான் இந்த வேலையைக் காட்டினாய்... நீ சொல்லுறபடி செய்யிறன் சொல்லு..."

"வைத்திலிங்கமாக்கள் கெதியிலை ஒண்டுஞ் செய்யாயினம். அவ்வளவு தூரத்துக்கு நடப்பான ஆக்களில்லை அவையள்... உனக்குத் தைக்கத் தெரியுந்தானே..."

"என்னவோ பாக்கியம் அக்காவின் புண்ணியத்தாலையும் அந்தப் பழைய மிசினாலையும் கொஞ்சம்கொஞ்சம் பழகி இருக்கிறன்."

"டேய் மடையா சாவகச்சேரி அக்பரிட்டை இன்டைக்கு உன்னைக்கொண்டு போய் அறிமுகப்படுத்திறன். அந்தாள் உனக்குத் தையல் முழுவதையும் பழக்கிவிடும்... வைத்திலிங்கம் பொல்லாத ஆள்... நீ இஞ்சையிருந்து கெதியிலை போய் விடுவாயெண்டு நினைக்கிறன். ஏதேனும் நடந்தால் நீ இந்த யாழ்ப்பாண ஏரியாவுக்கையே நில்லாதை உனக்கு இது சனியன் புடிச்சஊர். நீ ஆனை இறவுக்கு அங்காலை போயிடு... நீ நான் தாற கடிதத்தைக் கொண்டு திருகோணமலைக்குப் போ அங்கை இந்த விலாசமுள்ள கடையிலை உனக்கு வேலை கிடைக்கும் அந்தக் கடைக்காரர் எங்களுக்கு மிகவுந் தெரிஞ்சவர்."

படபடப்பாகப் பேசினான் சபா அவனது உதவியால் அக்பரின் சிநேகமும் கிடைத்தது. சபாவும்போய் விட்டான். வைத்திலிங்கத்தால் மட்டுவிலில் கொந்தளிப்புத் தொடங்கிவிட்டது.

வைத்திலிங்கம் தமது முதலாளித்துவ கைங்கரியமான கைக்கூலிகளை வைத்து சங்கத்தைச் சேர்ந்தவர்களை அடிப்பிக்கத் தொடங்கினர்.

தன்னால் அவர்கள் அடிவாங்குவது ராசுவுக்குப் பிடிக்கவில்லை.

ராசுவுக்குத் தொல்லைகள் அதிகரித்தது. இனியும் மட்டுவிலில் நின்றால் கொலையே விழுந்துவிடும் என்ற பயத்தில் அவன் சபாவின் கடிதத்தையும் தனது சேமிப்பையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான்.

இனிமேல் இந்த ஊருக்குப் பிணமாகக் கூடத் திரும்புவதில்லையென்ற சபதத்துடன் தான் அவன் புறப்பட்டான்.

நீர் நிறைந்த கண்களுடன் மட்டுவிலை விட்டுப் பிரிந்த அவன் திருகோணமலையில் தான் நிம்மதியாக வாழ்வேன் என்று தான் நினைத்தும் நம்பியும் இருந்தான்.

ஆனால் திருகோணமலையில்...? (வளரும்)

நிமிடக்கதை

"நன்றி"

வீட்டைப் பூட்டிவிட்டு, குடும்பத்துடன் கலியாண வீடொன்றிற்குப் போய்விட்டுத் திரும்பிய ஒருவர் தன் வீட்டின் முன் கதவு திறந்து கிடக்கவும், உடைமைகள் சில களவு போய்விட்டதையும் கண்டு, பொலிஸில் புகார் செய்யவெண்ணி, தன் காரில் விரைந்தார்.

வழியில் பொட்டலமொன்றுடன் போய்க் கொண்டிருந்த மனிதன் ஒருவன், காரை மறித்துத் தன்னைப் பட்டணம்வரை கொண்டுபோய் விடமுடியுமா என்று கேட்டான். 'சரி' என்று அவனை ஏற்றிக்கொண்டு செல்லும் வழியில், 'என் வீட்டில் களவுபோய்விட்டது. பொலிஸில் ஒருமுறைப்பாடுகொடுத்துவிட்டுவந்து உன்னைக்கொண்டு போய் பட்டணத்தில் விடுகிறேன்' என்றுசொல்லிவிட்டு பொலிஸ் நிலையத்தின் வாசலில் காரை நிற்பாட்டினார், வீட்டுக்காரர்.

கார் நின்றதுதான் தாமதம். அந்த மனிதன் குதித்திறங்கி அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, மீதித் தூரத்தை நடந்தே போய்விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு அவசரமாக நடந்தான். நெடுநேரத்தின்பின்னர் தான், அந்தமனிதன் அணிந்திருந்த கோட்டுதன்னுடையதைப் போலிருந்ததை உணர்ந்தார் வீட்டுக்காரர்.

—தென்மட்டுவில்
எஸ். கி. கே. அன்பழகன்
உதவி: தரைம்ஸ் டி சேகர்

அமைதிக்கு!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அதிக எதிர்பார்ப்புமின்றி அவர்கள் தங்கள் கடமையை பொறுப்புணர்ச்சியுடன் ஆற்றுகின்றார்கள். சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கு அங்கு நல்ல மதிப்பு இருக்கிறது. இடமாற்றங்களில்லை, அரசியல் தலையீடும் இல்லை.

நாங்கள் அமர்ந்திருந்த ஹோலின் ஒரு பக்கத்தில் இருந்த தம்பூராவின்மீது என் பார்வை திரும்பியது. நல்ல நேரம் இராகம் அவர் உள்ளிருந்து பிறந்தது.

உங்களுக்கு இசையில் எவ்விதம் ஆர்வம் உண்டாகியது?

மன அமைதிக்கு இசை ஒரு நல்ல மருந்து. ஆம், கர்நாடக இசையைத்தான் குறிப்பிடுகின்றேன். சிறு வயதிலிருந்தே எனக்கு சங்கீதத்தில் மோகம் ஏற்பட்டது. ஆனால் ஆசிரியராகக் கடமையேற்ற பின்னரே சங்கீதத்தை முறையாகக் கற்கத்தொடங்கினேன். காலஞ்சென்ற புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்கள் எனது குரு. கடந்த இரண்டுவருடகால இடைவெளிக்குப்பின்னர் தற்போது சங்கீதத்தில் மீண்டும் ஈடுபாடு ஏற்பட்டுள்ளது.

"கச்சேரிகள் சில செய்திருக்கிறேன். இன்னும் இதில் தேர்ச்சி பெறவேண்டுமென்பதே எனது விருப்பம்."

"பொப்" மியூசிக்கையே இப்பொழுது அநேகமானவர்கள் விரும்புகின்றார்கள். இதனால் கர்நாடக சங்கீதம் பாதிப்புக்குள்ளாகுமென நினைக்கின்றீர்களா?

"பொப்" மியூசிக்கை அதிகமானோர் விரும்புகின்றார்கள் என்பது உண்மைதான். ஆனால் கர்நாடக சங்கீதம் பழமையானது. தெய்வீகத்தன்மை வாய்ந்தது. நிரந்தரமான மகிழ்ச்சியைக் கர்நாடகசங்கீதமே ஊட்டும். ஆகவே பொப் மியூசிக்கினால் கர்நாடகசங்கீதம் பாதிப்புறாது என்றே நான் கருதுகின்றேன்.

இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டுள்ள திரு. செந்தில்நாதன் ஓய்வுநேரத்தில் வானசாஸ்திரம் கற்றதனால் பிரித்தானிய ரோயல் வானசாஸ்திர சங்கத்தின் கௌரவ அங்கத்தவராக 1968-ல் நியமிக்கப்பட்டுள்ளார். வானசாஸ்திரம் பற்றி விரைவில் தமிழில் நூலொன்றை வெளியிடவிருக்கும் திரு. செந்தில், சந்திரனில் மனிதன் காலடிவைத்த இந்த சகாப்தத்தில் தொன்மை வாய்ந்த வானசாஸ்திரத்தின் மகிமையும் பயனும் நன்கு புலனாகின்றன என்றார். மேல்நாடுகளிற்போல் இலங்கையில் இத்துறையில் அதிக வளர்ச்சி பெறப் போதிய சாதனங்கள், வசதிகள் இல்லை என்றும் தனது கருத்தை அவர் வெளியிட்டார்.

சட்டத்தரணி திரு. செந்தில்நாதனிடம் "தற்போது ஏற்பட்டுள்ள நீதிநிர்வாக மாற்றங்களிலுள்ள நன்மைகள் என்ன?" எனக்கேட்டேன்.

"கிறிமினல் (குற்றவியல்) வழக்குகள் துரிதமாக நடைபெறுகின்றது. சிவில் வழக்குகளைப் பொறுத்தளவில் நடைமுறையில் சில மாற்றங்கள் இன்னும் செய்யவேண்டியிருக்கிறது. இந்த மாற்றங்கள் வந்தபின்தான் இதன் நன்மையைக் கணிக்கமுடியும்" என்றார் அவர்.

"ஒருமணிநேரமாகிவிட்டது வருகிறேன்" என்று எழுந்தேன். அப்பொழுதுதான் அவரது அலுமாரியிலிருந்த புத்தகங்களை ஒருமுறைபார்த்தேன். அதனுள் சட்ட நூல்களோடு, விஞ்ஞான நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள், வானசாஸ்திர நூல்கள், கணித நூல்கள், உளவியல் நூல்கள், மற்றும் நூல்கள், சமய நூல்கள், சங்கீத நூல்கள் எல்லாம் நிறைந்து நெருக்கிக் கொண்டிருந்தன.

அவரது பதட்டமில்லாத அமைதிக்கு இவையும் ஒரு காரணமாயிருக்கலாம் என்று என்னுள் ஒரு குரல் கேட்கிறது.

வின்சர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்—பத்மினி, நம்பியார்
மதுரைவீரன்

ராணி சினிமா ஜெய்சங்கர்-ஏ. வி. எம்: ராஜன்
(யாழ்ப்பாணம்) மேஜர் சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
அன்புச் சகோதரர்கள்
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய சித்திரம்

றியோ இன்று மட்டும்
(நகர மண்டபம் யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 4-45, 7-15, 9-45
சனி, ஞாயிறு காலை 10-30
TIGER BY THE TAIL
(Delective Color)
நாளை முதல்
IDEAL MARRIAGE

நீடிக்கப்பட்டிருக்கிறது
ராஜா ஜெய்சங்கர்—சாவித்திரி
யாழ்ப்பாணம்) அசோகன்—மனோரமா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜக்கம்மா

ஸ்ரீதர் எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
(யாழ்ப்பாணம்)
பல்லாயிரக்கணக்கான ரசிகப் பெருமக்களின் வேண்டு
கோளுக்கிணங்க யாழ். நகரில் இதுவே
கடைசித் தடவையாக
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
மாட்டுக்காரவேலன்
(ஈஸ்ட்மென்கலர்)

லிடோ தினசரி
காலை 10-00, பி. ப. 2-00,
(யாழ்ப்பாணம்) மாலை 6-00, இரவு 9-30
"சூரியகாந்தி" படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக நடிகை ஜெயலலிதாவை 1973-ம் ஆண்டின் சிறந்த நடிகையாக "பிலிம் பெயர்" சினிமா பத்திரிகை ஸ்தாபனம் தெரிந்தெடுத்துள்ளது.
இன்றைய இளம் காதலர்கள் அனைவரும் பார்க்க வேண்டிய படம்!
முத்துராமன் - ஜெயலலிதா
சுந்தரராஜன் · சாவித்திரி · சோ · மனோரமா
நடித்த
சூரியகாந்தி

வெலிங்டன் தினசரி
(யாழ்நகர்) காலை 10-30 பி. ப. 2-30
மாலை 6-30, இரவு 9-30
சிவாஜி — ஜெமினி— — பத்மினி
நடித்த
திருவருட்செல்வர்

8 மாத மணவாழ்வின் பின் சாவை அணைத்த பெண்!

வல்வெட்டித்துறை, சனி

இருபத்திரண்டு வயதான இளம் கணவருடன் எட்டு மாதங்கள் வாழ்க்கை நடாத்திய பதினேழு வயது இளம் பெண் வாழ்வை முடித்துக் கொண்டுவிட்டார்.

மத்தியானச் சாப்பாட்டைத் தன் கணவனுக்கு அருகே இருந்து பரிமாறிய சிறிது நேரத்தில் அந்த இளம்பெண் சாவை அணைத்துக்கொண்டார்.

வீட்டின் பின்புறம் சென்று விஷத்தை அருந்திய மனைவி 'நஞ்சு அருந்திவிட்டேன்' என்று கூறியபடியே கீழே மயங்கி விழுந்தார்.

கரவெட்டி கிழக்கு சண்முகநாதனின் மனைவியான நாகராணியே [கலா] இவ்விதம் பரிதாப முடிவைத் தேடிக்கொண்டார்.

கணவர் கூலிவேலை செய்துவிட்டு அன்றைய தினம் வீட்டுக்குத் திரும்பியபோது பிற்பகல் 3 மணியளவில் கணவனுக்கு உணவு பரிமாறிய பின்னரே இச்சம்பவம் நடந்ததாக மரணவிசாரணையில் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். ராமநாதன் மரணவிசாரணை நடத்தினார்.

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

காலஞ்சென்றவரின் தாய் சாட்சியமளிக்கையில் ஐந்து பெண்ணும் ஓர் ஆணும் உள்ள எங்கள் குடும்பத்தில் காலஞ்சென்றவரே எனது மூத்த மகள். தோட்டத்திற்கும் போய் வேலைசெய்யவில்லை என்று ஏசியதும் ஆத்திரமடைந்தார். அதனால் நஞ்சு உண்டு இறந்தார்" என்றார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை டாக்டர் செல்வநாதன் நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட மரணமெனத் தெரிவித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கிணற்றில் விழுந்து மரணம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியை அடுத்துள்ள கனகபுரம் படித்த வாலிபர் திட்டத்தைச் சேர்ந்த பேரின்ப வேலுப்பிள்ளை சாந்தலட்சுமி [வயது 33] என்பவர் சென்ற வாரம் நீர் அள்ளச் சென்ற சமயம் தவறிக் கிணற்றுள் விழுந்து மரணமானார்.

இவருக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு எனவும் இதில் 3 மாத கைக்குழந்தை ஒன்று உண்டெனவும் விசாரணையின் போது தெரியவந்தது.

சம்பவ தினம் அன்று காலை உணவு முடிந்த பின்பு மதிய உணவிற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும்போது நீர் தேவைக்காகக் கிணற்றடி சென்று நீர் அள்ளியதாகவும் திடீரெனக் கயிறு அறுந்ததும் சாந்தலட்சுமி தவறிக் கிணற்றுள் வீழ்ந்துவிட்டதாகவும், பின்னர் வீட்டாரின் அபயக்குரல் கேட்டு அயலவர்கள் ஓடிவந்து பல முயற்சிகள் செய்தும் உயிருடன் அவரைக் காப்பாற்றமுடியாமற்போனதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

"மண் வாசனை வேண்டும்"

நெல்லியடி, சனி

"சமுதாயத்தைப் பின்னணியாகக் கொண்டு சித்திரிக்கப்படும் கதை, கவிதைகளில் புவியியல் தன்மைகளும் இடம்பெற வேண்டும். தற்காலத்தில் சமுதாயத்தைப் பின்னிப்பிணைந்து எழுதப்படும் கதை கவிதைகளில் மண்வாசனை வீசுவது மிகவும் குறைவாகவே உள்ளது."

இவ்வாறு பருத்தித்துறை இளம் எழுத்தாளர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட இலக்கியக் கருத்தரங்கில் பேசிய திரு. கே. ஜே. [illegible] கூறினார்.

திரு. காசி. வைரவநாதன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திருவாளர்கள் சி. [illegible], பி. சச்சிதானந்தம், ஜே. ஜெயக்குமார், க. கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

மற்றவரை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற கோவில்போல் தோன்றிவிடும்.

அவன் ஒரு பகுதிக்கோ அன்றேல் ஒரு குழுவிற்கோ முதுகெலும்பாக, உயிர்நாடியாக விளங்குவதோடல்லாமல் தனது உறுப்பினருடன் சகசமாக தாராளமாக சிநேகபூர்வமாக அன்புடனும் பண்புடனும் பழகுவான். அவனிடம் உற்சாகமும் தன்னம்பிக்கையும் கரைபுரண்டோடும். அவனிடமுள்ள உற்சாகம், தன்னம்பிக்கை வெற்றி மனப்பான்மை, விடாமுயற்சி ஆகியவையே அவனது வெற்றிக்குக் காரணம். இவை அவனுக்கு மனத்துணிவையும் தோல்வி அவனைக் கவ்வும் போது அத்தோல்வியை வெற்றியாக மாற்றவல்ல தைரியத்தையும் உருவாக்குகின்றது. இதனால் அவன் எப்பிரச்சினையையும் எச்சூழ்நிலையிலும் திறமையுடனும் பொறுமையுடனும் சமாளிப்பான். அவனையே நாடும் ஏடும் போற்றிப் புகழும். அவனே ஓர் உத்தம தலைவன். அவனே எம் தலைவன்.

(வளரும்)

4-வது வெற்றி வாரம்
[illegible]
[illegible]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(ஈஸ்ட்மென் கலர்)

ஸ்ரீகிருஷ்ணா
([illegible])
தினசரி 6-30, 9-30
ஜெமினி-ரவிச்சந்திரன்
நடித்த
சிநேகிதி

வெள்ளி
(மானிப்பாய்)
தினசரி 6.30 9-30
சனி ஞாயிறு 10-30 2-30
[illegible]
நடித்த
குடும்ப தலைவன்

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Kenneth Williams
in
CARRY ON ROUND
THE BEND
(Coler)

சாந்தி (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30, 6-30, 9-30
கல்யாண ஊர்வலம்
ஞாயிறு காலை 10-30
DIAMONDS ARE FOR
EVER

திருமுத்து
மூலிகைகள் சேர்ந்த
நவீன பற்பொடி

பற்களை
முத்துப்போன்று
வெண்மையாக்குகிறது,
நறுமணமளிக்கிறது,
முரசுகளை வலிமையாக்
குகிறது. சுழலும் மூடி
யுள்ள டப்பியிலும்,
மீட்டடைப்பு பக்கெற்றி
லும் கிடைக்கிறது.
LANKEM
தரமான
ஒரு லங்கெம் தயாரிப்பு.

பித்தன் தபால்கள்

அரசுடன் முட்டிமோதாமல் இருப்பது நல்லதல்லவா?

எஸ். தொண்டமான் அவர்கள்,
தலைவர், இ. தொ. கா.,
கொழும்பு.

தலைவரே!

இந்திய தேசிய கமிட்டியினர் ஆரம்பிக்க இருக்கும் சட்டமறுப்பு இயக்கத்திலே தாங்களும் தங்கள் காங்கிரஸும் சேரப் போவதை அறிய பெரிய ஏமாற்றமும் வருத்தமும் அடைந்தேன்.

அரசியலில் மேலான அனுபவமும் உலகம் புகழும் உன்னத தாங்கள் அவசரமுடிவுக்கு இந்த முடிவுக்கு வந்துவிட்டீர்களென்றே கருதுகிறேன். தாங்கள் அரும்பாடுபட்டு வளர்த்த மதிப்புவாய்ந்த தேயிலைத் தோட்டங்களை அரசாங்கம் எடுத்தமுறை தங்களுக்கு எவ்வளவு எரிச்சல் அளித்திருக்குமென்பதை சுலபமாக யாரும் உணர முடியும். தோட்டத் தொழிலாளருக்கு சொல்லமுடியாத கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதும் உண்மை. ஆனால் இதற்காக அரசியல் நோக்கத்துடன் யு. என். பி. ஆரம்பிக்கும் சட்டமறுப்பு இயக்கத்தில், தோட்டத் தொழிலாளரை ஈடுபடுத்துவது நல்லதாகுமா? இதனால் அந்த எளிய மக்களுக்கு நன்மையேதும் விளையுமா? புதிய புதிய சங்கடங்கள் ஏற்படுமென்பதே எனது கவலை.

மலையகத் தமிழரிடையே உணவுப் பஞ்சம் ஏற்பட்டு அவர்கள் நிலை மிகவும் பரிதாபமாக இருப்பதாக, சிறந்த முறையில் வெளியாகும் தங்கள் "காங்கிரஸ்" பத்திரிகை மூலம் அறிந்தேன். இவ்வித நிலையில் சட்டமறுப்பு அரசியல் போராட்டத்தில் அவர்கள் குதிப்பது அவர்களது சங்கடங்களைக் குறைப்பதற்குப் பதில் அதை அதிகரிக்கச் செய்யாதா?

தோட்டத் தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் பலவற்றைத் தங்கள் காங்கிரஸ், பேச்சு வார்த்தை மூலம் வெற்றிகரமாகத் தீர்த்துவருவதாகத் தங்கள் பத்திரிகை மூலமே அறியமுடிகிறது. உணவுப் பஞ்ச விஷயத்தையும், அதே ஆக்கமுறையில் தீர்க்க முடியாதா?

இது அரசியல் பிரச்சினையல்ல; மனிதப்பிரச்சினையும் தேசிய பிரச்சினையுமாகும். எந்தக்கட்சி ஆட்சியிலிருப்பினும், இந்த நெருக்கடியைத் தீர்ப்பது கஷ்டமன்று. வெளிக்காரணங்களினால் ஏற்பட்டுள்ள இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ஆக்க முறையும், எல்லாருடைய ஒத்துழைப்புமே தேவையாகும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

அரசாங்கத்துடன் ஒத்துழைக்கமுடியாவிட்டாலும், அத்துடன் இச்சமயம் வீணாக முட்டிமோதிக்கொள்ளாமல் இருப்பதே நல்லதல்லவா?

இப்படிக்கு,
பித்தன்.

குறிப்பு!

காங்கிரஸ் ஒன்றாக இருந்தபோது அதன் செல்வாக்கும் பலமும் அதிகமிருந்தது. துரதிருஷ்டவசமாக அது பிளவுபட்டபின் மலையகத் தமிழரும் பிளவுபட்டு அவதிப்படுகின்றனர். மீண்டும் சேரமுடியாவிடினும் இரு காங்கிரஸும், அந்த ஏழைகளின் பெயரால் ஒத்துழைக்க முடியாதா?

—பித்தன்

"ஓட்டைக்கப்பலை விட்டு வெளியே வாருங்கள்"

கே. காமராஜ் அவர்கள்
சென்னை

தலைவரே!

வணக்கம். புதுவைத் தேர்தலில் தாங்கள் இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்ததற்காக தங்கள்மீது பழைய காங்கிரஸ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன், நல்லதுதான். அவர்கள் நடவடிக்கை எடுக்குமுன் தாங்களே அந்த ஓட்டைக் கப்பலைவிட்டு வெளிவந்து, இந்திரா காங்கிரஸுடன் சேர்ந்து விடுவதே நலமென்று தோன்றுகின்றது.

நேருஜி காலத்திலே தாங்கள் இந்தியாவின் முடிசூடா மன்னராகவும் மன்னர்களை ஆக்கிவைக்கும் மன்னனாகவும் இருந்தீர்கள். தங்களைப்பற்றி தமிழர்களாகிய எங்களுக்கெல்லாம் எவ்வளவு பெருமையாக இருந்தது தெரியுமா?

யார் வைத்த கண்ணோ தெரியவில்லை. காங்கிரஸ் பிளவுபட்டு தங்கள் செல்வாக்கும் படிப்படியாகக் குறைந்து, தங்களுடன் தமிழ்நாட்டிலே காங்கிரஸின் செல்வாக்கும் அநேகமாக மறைந்தது.

பிளவுபட்ட காங்கிரஸ் ஒத்துழைத்தால் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதற்கு புதுவைத் தேர்தல் முடிவுகள் ஓர் அத்தாட்சி. இரண்டும் மீண்டும் ஒன்றுபட்டால்தான் தமிழகத்தில் காங்கிரஸ் தலைதூக்கமுடியும். தாங்கள் இதைச் சரியாக உணர்ந்துவிட்டீர்கள்.

ஆனால் பழைய காங்கிரஸிலுள்ள "பெரியவர்கள்" தோல்விக்குமேல் தோல்வி அடைந்தும் இது புரியாமல் இந்திரா காந்தியே பெரிய விரோதி என்று கருதி இன்னும் [illegible] விடாமல் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். தாங்கள் இன்னும் எவ்வளவு காலம் காத்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்?

வங்கதேச பயங்கர ஆபத்து ஏற்பட்டபோது அதை வெற்றிகரமாக சமாளித்து, பாரத நாட்டு மக்களையும் அதன் சுதந்திரத்தையும் காப்பாற்றினாரே அந்த வீராங்கனை இந்திரா காந்தி. இந்திய சரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கக்கூடிய அந்த ஒரு பெரிய சாதனைக்காகவாவது அவர் செய்த "குற்றத்தை" மன்னித்து அவருக்கு என்றென்றும் நன்றி செலுத்த வேண்டாமா?

தேர்தலில் அவருக்கு வெற்றிமேல் வெற்றி குவிந்து வருவதும், பழைய காங்கிரஸ் தோற்றுவருவதும் என்ன குறிக்கிறது. ஜனாதிபதி தேர்தலில், இனி அவர்களே வெற்றி பெற்றாலும் என்ன லாபமிருக்கின்றது? பொதுமக்கள் இந்திரா காந்தியையும் அவரது காங்கிரஸையுமே ஆதரிக்கின்றனரென்பது தெரியவில்லையா? மக்களின் தீர்ப்பு நன்கு தெரிந்தபின்பும், ஏன் பழைய காங்கிரஸைக் கட்டிக்கொண்டு தாங்கள் அழவேண்டும்? இன்னும் எவ்வளவு காலம்? எவ்வளவு சீக்கிரத்தில் தாங்கள் இவ்விஷயமாக சரியான முடிவு எடுக்கிறீர்களோ அவ்வளவும் தங்களுக்கும் நாட்டுக்கும் நல்லதாகும்.

இப்படிக்கு
பித்தன்

குறிப்பு:

வருகிற ஆகஸ்டு மாதத்தில் இந்தியாவிலே ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் நடக்க இருப்பதாகவும் அப்பதவிக்குத் தங்கள் பெயர் பிரஸ்தாபிக்கப் படுவதாகவும் கேள்விப்பட்டேன். இதுவரை ஒரு தமிழர் ஜனாதிபதியாக வராதது ஒரு பெரிய குறை. ஆகவே தமிழரின் பெருமைக்காகவாவது தாங்கள் அப்பதவிக்குவர வேண்டுமென்பது என்னைப் போன்ற பலரது ஆசை. அவசியம் செய்யவேண்டும். நாட்டு விடுதலைக்காகவும் நாட்டுமக்களுக்காகவும் வாழ்ந்துவரும் தங்களுக்கு இந்தியா இந்த நன்றிக்கடனைச் செலுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

கருணாநிதி பதிலளித்தார்

சென்னை, ஏப். 20

தமிழகமுதல்வர் திரு. கருணாநிதி தாக்கல்செய்த மத்தியில் கூட்டாட்சி- மாநிலத்தில் சுயாட்சி' என்பதற்கு அமைய அரசியல் சாசனம் திருத்தப்படவேண்டுமென்று கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் 5-வது நாளான இன்று கருணாநிதி பதிலளித்துப் பேசினார்.

முன்னதாக ஸ்தாபன காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் பேசுகையில், "இந்தத் தீர்மானத்தில் அரசியல்நோக்கு இருக்கிறது. அரசியல் சட்டத்தில் முன்னேற்றத்துக்குத் தடை இல்லை" என்றார்.

சிக்கனம்
"இடாம்பீக வாழ்வு —பின்பு
இட்டுச் செல்லும் தாழ்வில்தான்"
"சிக்கனமே சிறந்த செல்வம்"
சிக்கனமான சலவைக்கு
மில்க் வைற் சலவைப் பவுடரை
வாங்கிப் பாவியுங்கள்.
மில்க் வைற்
சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77,
யாழ்ப்பாணம்.

கூட்டணிக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் ரத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழர் கூட்டணியினர் இன்று மல்லாகத்திலும் சாவகச்சேரியிலும் நடாத்தவிருந்த பொதுக்கூட்டங்களை ரத்துச்செய்துள்ளது. இன்று பொதுக்கூட்டங்கள் நடைபெறுவதற்கு பொலிசார் முன்னர் அனுமதியளித்திருந்தபோதிலும் அரசாங்கம் நேற்று முன்தினம் செய்த முடிவைத் தொடர்ந்து பொதுக்கூட்டங்கள் அனைத்துக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதென்பதை அந்தந்தப் பொலிஸ் பகுதி அதிகாரிகள் அறிவித்துள்ளனர்

பொதுக்கூட்டங்களுக்கு அரசாங்கம் தடைவிதித்தாலும் தடைகளை மீறித்தாங்கள் கூட்டம் நடத்தப் போவதாகவும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டாலன்றித் தாம் ஜனநாயகமுறையில் அதைப்பின்பற்றி அமைதியான எதிர்ப்பு இயக்கத்தைச் செய்யவிரும்புவதாகவும் நாட்டைக்குழப்பத்தில் ஆழ்த்துவது தமது நோக்கமல்லவென்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் மற்றுமொரு மார்க்கத்திலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்தும் அகில தமிழர் கூட்டணியினரும் ஐக்கியதேசியக்கட்சியினரும் அரசாங்கத்துக்கெதிராக நடாத்தவிருந்த பொதுக்கூட்டங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தவஸ நிறுவன பிரசுரங்களுக்குத் தடை

"தவஸ" நிறுவனத்தின் பல பிரசுரங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவசரகால சட்டவிதிகளின் கீழ் தடைசெய்வதற்கான கட்டளையை தகவல் அதிகாரி அனுப்பிவைத்துள்ளார்.

தகுதிவாய்ந்த அதிகாரியாக பிரதமரினால் தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களுக்கும் பாதகமாகவும், அரசுக்கு எதிராகவோ மக்களைத் தூண்டிவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படும் பட்சத்தில் புதினப்பத்திரிகை தடைசெய்யப்படும் என்று சட்டவிதி கூறுகிறது.

எதிர்க்கட்சியினர் எடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கம் பொலிஸ், மற்றும் முப்படைகளையும் உஷார் நிலையில் வைத்துள்ளது. நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

ஜனநாயகத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளேன். இந்த அரசின் கீழ் பல ஆயிரக்கணக்கான யுவதிகளும் இளைஞர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டை நல்வழியில் நடத்திச்செல்லவேண்டிய இளைஞர்கள் சர்வாதிகாரிகளின் மாய வலையில் விழமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை. தேர்தலின் மூலம் முடிவடைந்த அதே பிற்போக்கு சக்திகள் திரும்பவும் வரவிடக்கூடாது.

சட்டத்தின் வரம்புக்குள் எம்மை எவரும் தண்டிக்கலாம், கண்டிக்கலாம். இது ஜனநாயக உரிமை. ஆனால் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் குந்தகம் விளைக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனால் நாட்டின் பிரதமர் என்றவகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியது எனது கடமை. இதை உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன். உறுதியாக உங்களிடம் ஒரு வேண்டுகோள். சர்வாதிகாரிகளுக்கு இடமளிக்காதீர்கள். ஐக்கியத்தோடு செயல்படுங்கள் வெற்றி நமக்கு நிச்சயம்.

சமயத்தை கிளிப்பிள்ளை போல் படிக்கக்கூடாது

மீசாலை, சனி

"சமய நூல்களை கிளிப்பிள்ளை போல் படிப்பதால் அவற்றுள் உள்ள உண்மைப்பொருள்களை தக்கதுவாயிலாக அறிந்துகொள்ளும்போது இறைவனைக் காணும் நிலையேற்படும். உண்மையையுணரும்போது நம்மைப் பிணித்திருக்கும் மாயையகல ஒன்றுவது என்ற ஞானக்கண் உதயமாகும் போதே இறைவனையறியும் உள்ளத்தில் உண்டாகும். சமயமென்பதும் கடவுளுடன் இரண்டறக்கலத்தலாகும். சமய உண்மைகளை புரிந்துகொள்ளும்போதுதான் இந்நிலை உதயமாகும்."

சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் ஸ்ரீ குருமகாராஜ்ஜியின் சீடர் மகாத்மா அருளுரை வழங்கும்போது இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி குருகுல எம். பி.யின் வாசஸ்தலமான சரஸ்வதி பூங்காவிற்கு விஜயம் செய்த ஸ்ரீ மகாத்மா மகனீர் கல்லூரிக்கு அழைத்துவரப்பெற்று கல்லூரி அதிபர் திருமதி ப. சிவசங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டை சுதுமலை தெற்கு மாரியம்மன் கோவில் அரங்கில் அப்பால் விநாயகர் இக்கழகத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழா 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு திரு. பொ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது. நான்கு நாடகங்கள் விழாவின் முக்கிய அம்சமாக இடம்பெறுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu, P. O. No. 49, Jaffna. Telegram Eelanadu
Telephone 389 புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.